போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

II-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART II OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 7, 1922.

ந. 6.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் பிப்ரவரிமீ 7உ. [விலை, 2 அ. 6 பை.

சால்ட், அப்காரி அண்டு கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

நெ. 1, 1922-ம் வருஷம் ஜனவரிமீ 19உ.

அப்காரி, அபினி சுதந்தரங்களை விற்பனைபண்ணுவதைப்பற்றிய நோட்டிஸ்.

இதனால் தெரிவிப்பது என்னவென்றால் 1922-ம் வருஷம் ஏப்ரல்மீ 1உ முதல் 1923-ம் வருஷம் மார்ச்சிமீ 31உ வரையிலுள்ள பன்னிரண்டுமாத காலத்திற்கு மதுவையும் அபினி கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களையும் விற்பனைபண்ணுவதற்காக ஏற்படுத்திய சுயாதீனக் கடைகள் இத்தனை என்பதையும் அவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பிரதேச எல்லைகளையும் கலெக்ட்டர்கள் தங்கள் தங்களுடைய டிஸ்ட்ரிக்ட்டு கெஜெட்டுகளில் பிரசுரம்செய்வார்கள். மேலும் அந்தப் பிரதேசங்களில் விற்பனைபண்ணும் சுதந்தரமானது எந்தத் தேதியில் எந்த இடத்திலே எந்த உத்தியோகஸ்தர்களால் ஏலம் போடப்படுமென்று மேற்படி கலெக்ட்டர்களால் தெரிவிக்கப்படுகிறதோ அந்தப்படி அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பகிரங்கமாய் ஏலம் போடப்படும். மலையாளம் கலெக்ட்டர் தங்கள் ஜில்லாவிலிருக்கிற அட்டப்பாடி பள்ளத்தாக்கில் கரார் கட்டணத்திற்கு கொடுக்கப்படும் சாராயக் கடைகளுக்கு சம்பந்தப்பட்ட ஸ்பெஷல் நிபந்தனைகளை பிரத்தியேகமாக பிரசுரம் செய்வார்.

சுயாதீனமான சாராயக்கடைகளும், அன்னிய மதுக்கடைகளும், பீர் கடைகளும், கஞ்சாக்கடைகளும், அபினிக்கடைகளும், முறையே இன்னின்ன டிஸ்ட்ரிக்ட்டுகளில் விற்கப்படுமென்று அடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன :—

1922-ம் வருஷம் ஏப்ரல்மீ 1உ முதல்.

சாராயம், கஞ்சா, அபினி கடைகள்.	அன்னிய மதுக்கடைகள்.	பீர் கடைகள்.
எல்லா ஜில்லாக்களில்.	கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், பல்லாரி, சென்னப்பட்டணம், செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, மலையாளம் ஜில்லாக்களில்.	நெல்லூர், பல்லாரி, செங்கல்பட்டு, சித்தூர், வட ஆற்காடு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், மலையாளம் ஜில்லாக்களில்.

கரார் கட்டணத்தின்பேரில் கொடுக்கப்படும் சீமைசாராய விற்பனை லைசென்ஸுகளைப்பற்றி பிரத்தியேகமான நோட்டிபிகேஷனில் சொல்லப்படும்.

ஏல விற்பனையின் நிபந்தனைகள்.

I. விலைகேட்கிறவன் ஒவ்வொருவனும் அப்படி விலைகேட்பதற்குமுன்னே டேவணி கட்டவேண்டியது. டிபாஸிட் ஏலதினத்தில் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தரால் வாங்கிக்கொள்ளப்படும். ஒரு முக்கியமான கடை அல்லது பல கடைகளை ஏலம் கேழ்க்க விருப்பமுள்ள ஒருவன் சாதாரணமாய் கட்டவேண்டிய டிபாசிட்டு தொகை ரூபா 50. மொத்தத்தில் ரூபா 50 அல்லது அதற்கு குறைந்த மாதாந்தர விலையுள்ள இரண்டு அல்லது

மூன்றுக்கு அதிகமில்லாத கடைகளை ஏலம் எடுப்பவர்களுக்கு இந்த டிபாசிட்டை ரூபா 20 ஆகவும் சிறிய தனிக்கடைகளை ஏலம் எடுப்பவர்களுக்கு ரூபா 5 ஆகவும் குறைக்கப்படும்.

II. விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கிரமத்தை மாற்ற முகாந்திரம் காணப்பட்டாலொழிய ஷாப்புகள் பிரசுரம்செய்யப்பட்டிருக்கிற கிரமத்தில் ஏலம் போடப்படும். ஏலம் கேட்க ஆரம்பிக்கவேண்டிய விலைகளை கலெக்டர்களுடைய இஷ்டப்படி நிர்ணயம் செய்யப்படும். கடைகளுக்கு சர்க்காரால் நியமிக்கப்பட்ட உத்தேசவிலை பிரசுரப்படுத்தப்படமாட்டாது. ஆனால் முந்திய 5 வருஷங்களின் சராசரி குத்தகைத்தொகைகள் கலெக்டரவர்களால் ஏலமெடுப்பவர்களுக்குத் தெரியும்பொருட்டு சாத்தியமானவரையில் பிரசுரம் செய்யப்படும்.

III. எவனும் மற்றொருவனுக்காக அவனிடத்தில் பவர் ஆப் அட்டர்னி என்னும் முக்தியார்நாமா பெற்றிருந்தாலொழிய விலை கேட்கக்கூடாது.

IV. ஏலம் நடத்துகிற அதிகாரி தமக்கு யுக்தமானால் அடியிற்கண்ட காரணத்திற்காக ஒருவன் கேட்ட ஏலத்தொகையை அங்கீகாரம் செய்வதை மருதளிக்கலாம் :—(1) யாதொரு கிரிமினல் கோர்ட்டினால் தண்டிக்கப்பட்டவன் அல்லது அப்காரி, அபினி ஆக்டின் உடன்படிக்கையையாவது யாதொரு லைசென்ஸின் நிபந்தனைகளையாவது மீறிநடந்த குற்றத்தை முன்னமே செய்தவன் என்கிற காரணத்தினால் லைசென்ஸு பெறுவதற்கு யோக்கியதையில்லாதவன் என்கிற காரணத்தினாலாவது ; அல்லது (2) கடன்தீர்க்க நிர்வாகமில்லாதவன் அல்லது சர்க்காருக்கு பாக்கிதாரன் என்கிற காரணத்தினாலாவது ; (3) யாதொருவன் கேட்ட ஏலத்தொகையானது நிராதாரமென்று தோன்றும்பக்ஷத்தினாலாவது ; (4) யாதொரு ஏலம் கேட்கிறவன், கடையிருக்கும், கடையினால் சப்ளை செய்யப்படும், கடைக்கு அடுத்த, கிராமத்தினுடைய கிராம நவுகராகவாவது அல்லது அவன் பந்துவாயாவது இருக்கும்பக்ஷத்தில் ; (5) யாதொருவன் கடையிருக்கும் காண்டிராக்ட் பிரதேசத்தில் நாட்டுச் சாராயங்களை கண்டிராக்டாய் சப்ளை செய்கிறவன் என்னும் காரணத்தினாலாவது ; (6) யாதொரு பீரை உற்பத்திபண்ணுகிறவன் பீர்கடைகளுக்கு ஏலம் கேட்டானென்கிற காரணத்தினாலாவது ; (7) கவர்ன்மெண்டுக்கு பிரதிகூலமான ஏற்பாடுகளை தடுக்கும்பொருட்டாவது ; அல்லது (8) வேறெந்த உறுதியான காரணத்திற்காவது.

V. உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு கடைகள் விடப்படும். எந்த காரணத்தினாலாவது உயர்ந்த ஏலத் தொகையை தள்ளிவிட்டால் அதற்கு அடுத்த ஏலத்தொகை ஒப்புக்கொள்ளப்படும் அல்லது விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தருடைய யுக்தப்படி கடை மறுபடியும் விற்கப்படும். விவாதம் நேரிட்டால் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தருடைய தீர்மானம் முடிவானதாகும். அந்த விற்பனை கலெக்டரால் விதிப்படிக்கு ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுவதற்குள்ளாகும் ; அவருக்குத் தம் யுக்தப்படிக்கு எந்த ஏலத்தொகையையும் ஒப்புக்கொள்ளுகிறதற்கும் ரத்து செய்கிறதற்கும் அதிகாரமுண்டு. இவ்விதமாக ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுகிறது போர்டாரால தகுந்த காரணங்களைப்பற்றி மாற்றப்பட்டாலொழிய ஏலத்தை ஒப்புக்கொண்டதற்குச் சமானமாகும். மேலும் ஏலமானது கலெக்டராலே நேரிலாவது அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறே எந்த உத்தியோகஸ்தராலேயாவது நடத்தப்பட்டாலும் இவ்வித ஊர்ஜ்ஜிதம் ஆவசியகம்.

VI. பிரதிதினம ஏலம் முடிந்தவுடன் விலைகேட்டு குத்தகை கிடைக்கப்பெறுதவர்கள் கட்டியிருக்கிற டேவணித்தொகைகள் அவர்களுக்கு திரும்பக்கொடுத்துவிடப்படும். ஏலம் நடந்துகொண்டிருக்கையில் எவனுடைய ஏலத்தொகை விலை ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அவன் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தர் உத்தரவுபண்ணும்பட்சத்தில் உடனேயும், இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்தில் முதலில்கட்டும் டேவணி இரண்டு மாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய ஒவ்வொரு கடைக்கும் மறுபடியும் I-வது பிரிவில் கண்டபடி கட்டிய டிபாசிட்டுத் தொகையைத்தவிர பாதிமாதத்திய குத்தகைத்தொகை டேவணியாக செலுத்தவேண்டியது. அப்படி கட்டாவிட்டால் I-வது பிரிவின்படி அவன் கட்டிய டேவணித்தொகை அவனால் இழந்துவிடப்பட்டு, அந்த கடை மேற்சொல்லிய நிபந்தனைகளை அனுசரித்து உடனே விற்பனைசெயயும் உத்தியோகஸ்தர்களால் ஏலம் போடப்படும், அல்லது கலெக்டரால் வேறே எவ்விதமாயாவது வினியோகஞ்செய்யப்படும். அப்படி டேவணி கட்டத்தவறினவன் அதே கடைக்காவது அல்லது வேறு எந்த கடைக்காவது நடந்துகொண்டிருக்கிற ஏலத்தில் மறுபடியும் விலைகேட்பதற்கு யோக்கியதையில்லாதவனாய்விடுவான்.

VII. ஏலத்தில் கடை கேட்டு எடுத்துக்கொண்டு, I, VI பிரிவுகளில் கண்டிருக்கிறபடி டேவணி கட்டியிருக்கிறவரும் கலெக்டர் ஏலத்தொகையை அங்கீகாரம் செய்ததை தெரிவித்த 10 நாளைக்குள்ளாக முதலில் கட்டின தொகைகள்போக எவ்வளவு தொகை செலுத்தினால் இரண்டுமாதத்திய குத்தகை தொகைக்கும் சமமாக ஆகுமோ அவ்வளவு தொகையை ரொக்கமாயாவது அல்லது ஒப்புக்கொண்ட பத்திரமாவது கட்டவேண்டியது. மேலும் அனாவசியமான தாமதமின்றி இதன்பின்னால் கண்டிருக்கிற நிபந்தனைகளடங்கிய லைசென்ஸை பெற்றுக்கொள்ளவேண்டியது. லைசென்ஸைப் பெற்ற பிற்பாடு கொள்வோர்கட்கு மரணம் சம்பவித்தால் அவர்களுடைய வார்ஸுதாரர்களும் காரிய கர்த்தர்களும் லைசென்ஸின் ஷரத்தின்பிரகாரம் கவர்ன்மெண்டுக்கு சேரவேண்டிய எல்லா தொகைக்கும் பிணைக்கப்படுவார்கள். மேலும் லைசென்ஸின் எல்லா ஷரத்துகளின்பிரகாரம் சரியாக நடப்பதற்கு உடன்படுவார்கள். அடியில் உள்ள VIII பிரிவில் கண்டபடி இரண்டுபங்கு தொகை செலுத்த கேட்காமலிருக்கும் பக்ஷத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏல

தாரன் முதலில் செலுத்தின தொகை இரண்டுமாதத்திய குத்தகை தொகைக்கு அதிகப்பட்டால் அதிக தொகையை அவருக்கு வாபிஸ்செய்யப்படும்.

VIII. விறபனைக்குப் பின்னிட்டு விசாரணைசெய்வதில் விக்கிரயம்பெற்றவன் ஸ்திதியுள்ளவனல்லவென்று சந்தேகம் நேரிட்டபக்ஷத்தில் அந்த விக்கிரயம்பெற்றவனை மேற்சொல்லிய VII-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிற தொகையோடு பின்னும் இரண்டுமாதத்திய குத்தகை தொகையை டிபாஸிட் செலுத்தும்படிக்காவது அல்லது கண்ட்ராக்ட்டின் ஷரத்துகளின்படி அவனால் சேரவேண்டிய எல்லாத்தொகைகளையும் செலுத்தத்தவறினால் சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்ளுபவர்க்கு உள்படுத்தி அவனுடைய அசையாப்பொருள்களை கவர்ன்மெண்டுக்கு ஷை தொகை முழுவதிற்கும் அடமானமாகவைத்து ஒரு அடமான பத்திரம், எழுதிக்கொடுக்கும்படிக்காவது செய்விக்கப்படும். அல்லது விக்கிரயம் பெற்றவன் கண்டிராக்டின் ஷரத்துகளின்படி அவனால் சேரவேண்டிய எல்லாத்தொகைகளையும் கிரமப்படி செலுத்தவேண்டிய நிமித்தியமாய் ஒரு ஜாமீன்தாரனை அல்லது ஜாமீன்தாரர்களைக்கொண்டு ஒரு ஜாமீன் பத்திரமும், விக்கிரயம் பெற்றவன் ஷை கண்டிராக்டின்படி செலுத்தவேண்டிய எல்லாத்தொகைகளுக்கும் ஷை ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களுடைய அசையாப்பொருள்களை கவர்ன்மெண்டுக்கு அடமானமாகவைத்து ஒரு அடமானப்பத்திரமும் எழுதிக்கொடுக்கும்படி செய்விக்கப்படும். ஷை அடமானப்பத்திரத்தில், ஜாமீன்தாரா அல்லது ஜாமீன்தாரர்களாவது விக்கிரயம் பெற்றவனாவது மேலசொல்லிய தொகைகளை கொடுக்கத்தவறினால் ஷை சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்ளுபவர்க்கு உள்படுத்தி எழுதப்படும்.

மேல்சொல்லிய ஜாமீன்பத்திரத்தையும், அடமானபத்திரங்களையும் ஸ்டாம்பு ஒட்டி விக்கிரயம்பெற்றவனுடைய செலவில் ரெஜிஸ்டர் செய்விக்கப்படும். எந்த லைஸென்ஸுதாரனுக்கு ஜாமீன்தாரர்கள் அவசியமென்று கேட்கப்படுகிறதோ அவன் முச்சிலிக்காய் உடன்படிக்கைசெய்ய பிணைக்கப்படுவான்.

IX. எவனாவது VII-வது பிரிவின்படி டேவணி செலுத்த தவறிப்போனாலும் அல்லது லைஸென்ஸுகள் பெற்றுக்கொள்ள தவறிப்போனாலும் அல்லது VIII-வது பிரிவின் நிபந்தனையின்படி நடக்கத்தவறினாலும், அல்லது உடன்படிக்கை எழுதிக்கொடுக்கத்தவறினாலும், முன்னமே கட்டிய டேவணித்தொகைகள் அவனால் இழந்துவிடப்பட்டு அந்த கடை கலெக்ட்டரால் விளம்பரம் செய்யப்பட்ட தேதியில் டிவிஷனல் ஆபிஸரின் உத்திரவுக்குட்பட்டு மறு எலம் போடப்படும் அல்லது வேறு விதமாய் கலெக்ட்டரால் வினியோகிக்கப்படும். இந்த பிரிவின்படி மறு எலம் போடுவதில் நஷ்டம் நேரிட்டால் அதற்காக மேற்சொல்லியபடி தவறிப்போனவன் உள்ளாகவேண்டியது; லாபம் நேரிட்டால் அது ஒன்றும் அவனுக்குச் சேரமாட்டாது; நஷ்டம் உண்டாகும்போது அவன் முதல் எலவிற்பனை ஷரத்தின்படி தவணை முழுமைக்கும் செலுத்தவேண்டிய பூராத்தொகைக்கும், மறு எலவிற்பனையில் கிரயத்துக்குக் கொண்டவனால் செலுத்தப்படத்தக்க பூராத்தொகைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அதைக் கட்டிசகொடுக்கவேண்டியது. அப்படி மறு எலத்தில் நஷ்டம் நேரிடுகிறவிஷயத்திலே மேற்சொல்லியபடி இழந்துவிடப்பட்ட டேவணித்தொகைகள் மறு எல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத்தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மிகுதி நஷ்டம் ஏதாவதிருந்தால் அது லாண்ட ரெவினியு பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே மேற்சொலலியபடி தவறினவனிடத்திலிருந்து வசூல்செய்யப்படும். இழந்துவிடப்பட்ட அந்த டேவணித்தொகைகள் மறு எல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத்தொகைக்கு அதிகப்பட்டிருந்தால் அந்த டேவணித்தொகைகள் முழுவதும் ஸர்க்கார் தாக்கல் செய்துவிடப்படும். மறு எலம் போடுவதன்றி வேறேவிதமாய் கடை வினியோகிக்கப்பட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்திறகும் மேற்கூறியபடி தவறிப்போனவன் உள்ளாகவேண்டியது.

X. அப்காரி அல்லது அபினி சுதந்தரத்தை விக்கிரயம்பெற்றவன் கிரமப்படி ஷை லைஸென்ஸைப் பெறுமலிருந்தாலுங்கூட அடியிற்கண்ட ஷரத்துகளை மீறி நடப்பதாக விதிக்கப்பட்டிருக்கும் சிக்ஷைகளுக்குள்ளாவான்.

XI. VII-வது அல்லது VIII-வது பிரிவில் கண்ட டிபாஸிட்டுகளை ரொக்கமாயாவது அல்லது ஒப்புக்கொண்ட கவர்ன்மெண்டு, போர்ட்டு டிரஸ்ட், முனிஸிபல் அல்லது லோகல் போர்ட் ஸெக்யூரிடி பத்திரமாயாவது போஸ்டல் சேவிங்ஸ் பாங்க்கு புஸ்தகங்களாகவாவது, அல்லது மாகாண கோஆபரேடீவ் பாங்க்கு (மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்க்கு)விருந்தாவது அல்லது கோஆபரேடீவ் ஸொஸயடி ரிஜிஸ்ட்ரார் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட எந்த சென்ட்ரல் பாங்க்கிலிருந்தாவது அடையப்பட்ட டிபாஸிட்டு சேர்டிபிகேட்டாகவாவது கட்டலாம். ரொக்கமின்றி வேறு விதமாய் டிபாஸிட்டுகள் கட்டினால் ரொக்க டிபாஸிட்டைக்காட்டிலும இவ்வளவு அதிகமான தொகைக்கு மேல் கண்ட ஒவ்வொரு பத்திரமும் இருக்கவேணுமென்று காலக்கிரயத்தை உத்தேசித்து கலெக்ட்டரவர்கள் உத்திரவு செய்யலாம். அவ்விதம் டிபாஸிட் செய்யப்படுகிற ஸெக்யூரிடி பத்திரங்கள் அல்லது ஸேவிங்ஸ் பாங்கு பாஸ் புத்தகங்கள் கலெக்ட்டரவர்கள்பேரில் இண்டார்சு செய்யப்படவேணும். கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட்டுகள் எந்த கஜானாவில் டிபாஸிட் செய்யப்படுகின்றனவோ அந்த கஜானாவிலேயே அவைகளுக்குள்ள வட்டி கொடுக்கப்படவேண்டுமென்று இஷ்டப்பட்டால் அது விவரம் அவைகளின் மீது குறிப்பிட்டு எழுதப்படவேண்டும். கோஆபரேடிவ் பாங்க்கு டிபாஸிட்டு சர்ட்டிபிகேட்டு

களின் விஷயத்தில், டிபாஸிட்டுகள் ஜில்லா கலெக்டர் பேரில் இருக்கவேண்டியது அப்படி டிபாஸிட்டு செய்வதில் உண்டாகக்கூடிய கஷ்டங்களுக்கு பாத்தியப்படுவதாய் கண்டிராக்டர் எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்ளவேண்டியது; கலெக்டர் வேண்டும்போது பணத்தை பெற்றுக்கொள்ளலாமென்று பாங்குகள் சர்ட்டிபிக்கேட்டுகளின்பேரில் யாதாஸ்து செய்திருக்கவேண்டியது.

ரொக்க டிபாஸிட்டை குத்தகையின் கடைசி மாதங்களுக்கு செலுத்தப்படவேண்டிய கிஸ்தி தொகைகளுக்கு ஈடு செய்துகொள்ளப்படும். டிபாஸிட் செய்யப்பட்ட ஸெக்யூரிடி பத்திரங்களும் சேவிங்ஸ் பாங்கு புஸ்தகங்களும் கோஆபரேடிவ் பாங்க்கு டிபாஸிட்டு செர்ட்டிபிகேட்டுக்களும் கவர்ன்மெண்டுக்கு சேரவேண்டிய பூரா கிஸ்தி தொகை ரொக்கமாய் செலுத்தப்பட்டவுடன் வாபிஸ் செய்யப்படும். ஆனால் டிபாஸிட் செய்தவர்கள் ஷை டிபாஸிட்டுகளை ஸர்க்காரே எடுத்துக்கொள்ளவேணடுமென்று கேட்டுக்கொண்டால் அவைகள் காலக்கிரயப்படி எடுத்துக்கொள்ளப்படும். பாக்கி ஏதாவது தொகை ஸர்க்காருக்கு சேரவேண்டியிருந்தால் அதை ரொக்கமாய் செலுத்தவேண்டும். ஏலவிற்பனை நிபந்தனைகளின் IX-வது பிரிவின்படியாவது அல்லது எல்லா அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான பொது நிபந்தனைகளில் 37-வது நிபந்தனைப்படியாவது பணம் செலுத்தத்தவறினால் ஸர்க்காருக்கு குத்தகைக்காக செல்லவேண்டிய தொகை எவ்வளவாயிருந்தபோதிலும் டிபாஸிட் செய்யப்பட்ட எல்லா ஸெக்யூரிடிகளும் விற்கப்படும். அப்படி விற்ற பிறகு ஸர்க்காருக்கு பாக்கி ஏதாவது சேரவேண்டியிருந்தால் அந்த தொகை கிஸ்தி பாக்கியைப்போல் வசூலிக்கப்படும்.

சாராயம் மொத்த விற்பனை பண்ணுவதற்குக் கொடுக்கப்படும் லைஸென்ஸு நிபந்தனை

XII. நாட்டுச்சாராயம், மொத்த விற்பனைக்குரிய சுதந்தரத்தைப்பற்றி செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் இதில் சம்பந்தப்பட்ட டிஸ்டிரிக்டுகளின் கலெக்டர்களிடத்திலே 1922-ம்௵ மார்ச்சு௴ முதல் தேதியிலாவது அதற்கு முன்னிட்டாவது வந்து சேரவேண்டியது. ஒவ்வொரு விண்ணப்பத்தோடும் 15 ரூபாய் கட்டணம் அனுப்பவேண்டியது. லைஸென்ஸுகளுக்காக எவர்கள் செய்துகொண்ட விண்ணப்பம் அங்கீகரிக்கப்படவில்லையோ அவர்களுக்கு அந்தக் கட்டணம் திரும்பக் கொடுத்துவிடப்படும். இந்த விளம்பரத்தின்படி லைஸென்ஸுகள் கொடுக்கப்பட்டால், அதனாலே ஏக சுதந்தரமுண்டாகமாட்டாது. இப்போது எந்த லைஸென்ஸுகளுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறதோ அந்த லைஸென்ஸுகள் செலாவணியாய்க் கொண்டிருக்கையில் எப்போதாவது வேறு நபர்களுக்கு அதே நிபந்தனைகளின்மேல் லைஸென்ஸுகள் கொடுக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டு. லைஸென்ஸின் நிபந்தனைகளை சரியானபடி நிறைவேற்றுவதற்கு ஜாமீனாக கலெக்டரால் குறிக்கப்பட்ட தொகையை டிபாஸிட்டு செய்தும் எந்த ஜில்லாவில் நாட்டுச்சாராய டெப்போக்கள் திறக்கவேணுமோ அந்த ஜில்லா சப்ளை கண்ட்ராக்ட்தாரரிடத்திலிருந்து டெப்போக்கள் திறக்கவேண்டியதற்கு அனுமதி பெற்றுக்கொண்டாலும்தான் அன்னிய மனிதர்களுக்கு லைஸென்ஸுகள் கொடுக்கப்படும் கண்ட்ராக்ட்தாரரிடமனுமதிபெற்று திறக்கப்பட்ட டெப்போக்களை கலெக்டர் இஷ்டப்படி நடத்தாவிட்டால் அவைகளை எப்பொழுதும் மூடிவிடலாம். சில்லறை கடைகளில் பாத்தியதை உடைத்தாயிருக்கிற மனிதர்களுக்கு மொத்தவிற்பனை டெப்போ லைசென்ஸுகள் கொடுக்கப்படமாட்டாது.

மேற்சொல்லிய பிரிவுகளின்படி கொடுக்கப்படும் லைஸென்ஸுகள் கீழேவரும் அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்குப் பொதுவான நிபந்தனைகளையும் ஒவ்வொரு லைஸென்ஸுக்குரிய கிழே சொல்லியிருக்கும் விசேஷ நிபந்தனைகளையும் உடைத்தாயிருக்கும்.

எல்லா அப்காரி அபினி லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான பொது நிபந்தனைகள்.

1. கலெக்டரால் நியமிக்கப்படும் தேதிகளில் டெப்போக்களும் கடைகளும் திறக்கப்படவேண்டியது. பின் கண்ட 10, 11 அல்லது 40-வது நிபந்தனையின்படி அவைகளை கொஞ்சகாலத்திற்காகிலும் அல்லது காயமாகவாகிலும் மூடப்படவேண்டியது என்று உத்திரவு செய்தாலொழிய தினந்தோறும் அவைகளை திறந்துவைக்கவேண்டியது.

2. சர்க்காருக்குச் சொந்தமான அல்லது கட்டுக்கடங்கிய குறிப்பிட்ட இடங்கள் தவிர, மற்ற இடங்களிலுள்ள கடைகளை விற்பனைக்குக் கொண்டவர்கள் கடைகளை ஸ்தாபிக்க சரியான இடங்களைப்பற்றி தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. கலெக்டர் அவர்களால் பிரசுரம் செய்யப்படும் எல்லைக்குள் எந்த இடத்திலாவது ரெவினியு, போலீஸ் உத்தியோகஸ்தர்களால் அங்கீகரிக்கப்படும் இடத்தை நியமித்துக்கொள்ள அவர்களுக்கு சுதந்தரமுண்டு. அப்படி நியமித்ததும் அங்கீகரிக்கப்பட்டதுமான கடைகளின் எல்லைகளை லைஸென்ஸில் எழுதவேண்டியது. மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களின் உடமையும் (லைஸென்ஸு பெறாத மனிதர்களுக்குரிய விதிகளுக்கு சம்பந்தப்பட்டதைத் தவிர), அல்லது விற்பனையும் அந்த எல்லைகளுக்கு வெளியே தவிர்க்கப்பட்டிருக்கிறது.

3. அப்காரி அல்லது அபினி லைஸென்ஸின் முகாந்தரமாய் செய்யும் விற்பனையானது அங்கீகரிக்கப்படும் கட்டிடத்தில் நடத்தவேண்டியது. அந்த கட்டிட முழுமையாவது அல்லது அதன் தனிமையான முழு பாகமாவது டெப்போ அல்லது கடையினுடைய முழு உபயோகத்திற்கு வைத்திருக்கவேண்டியது. முனிஸிபாலிடிகளிலும், 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனசங்கியையுள்ள டவுன்களிலுமுள்ள சாராயக்கடை அல்லது டாவ

ரன் விஷயங்களில் வீதிப்புறம் தவிர வேறு எவ்விதமாவது உள்ளேபோகவாவது அல்லது வெளியே வரவாவது எந்த வழியும் இருக்கக்கூடாது. வேறே கதவுகளிருக்கும்பக்ஷத்தில் அவைகள் சால்ட் அப்காரி அண்டு கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரால் ஸீல் செய்யப்பட்டு பூட்டுபோட்டு மூடப்படவேண்டியது. கடையின் உள்பக்கம் பகலில் போதுமான வெளிச்சமுள்ளதாயிருக்கவேண்டும், உள் பக்கமுழுவதும் முன்கதவின் மூலமாய் தெரியும்படியாயிருக்கவேண்டும். மேலும் கடையானது கடையில் விற்பவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் அல்லது காவல்காரர்களுக்கும் தவிர இதராளுக்கு வாசஸ்தலமாக இருக்கக்கூடாது. டெப்போ அல்லது கடைக்கும் சமீபமாயுள்ள குடியிருக்கிற வீட்டிற்கும் வழியிருந்தால் அதை இராக்காலத்தில் பூட்டி வைக்கவேண்டியது.

4. அன்னிய மதுவிஷயத்தில் ஒரே மனிதன் இரண்டு அல்லது அதிகமான அன்னிய மது லைசென்ஸுகளை வைத்துக்கொண்டிருக்கிறதும், மருந்துசெய்து விற்பவர்களும், வயித்யர்களும் தவிர மற்றவர்களால் ஒவ்வொரு லைசென்ஸையும் அனுசரித்து விற்பனைகள் பிரத்தியேகமான இடங்களில் நடத்தப்படவேண்டியது.

5. மதுபான கடைகளில் பிரத்தியேகமாகயிருந்து மதுபானஞ் செய்யும்பொருட்டு கலெக்டரால் கட்டணமின்றி ஸ்பெஷல் லைசென்ஸு கொடுக்கப்படும். ஆனால் மேற்கூறிய பிரத்தியேகமானயிடம் வாசப்படியிலிருந்து உள்புறம் முழுவதும் திருஷ்டிக்கு உள்பட்டதாகயிருக்கவேண்டும். அல்லாமலும் அந்த பிரத்தியேகமான இடத்திற்கு வழி கடையின் துவாராவாகவாவது வேறு வழியாகவாவது இருக்கவேண்டும். ஆனால் அந்த வழியின் முன்புறத்தில் இது பிரத்தியேகமான இடமென்று சரியான பலகை போட்டுவைக்கவேண்டியது.

6. ஒவ்வொரு டெப்போ அல்லது கடைக்கு முன்புறத்தில் ஒரு பலகையை மாட்டிவைக்கவேண்டியது ; அந்த பலகையில் லைசென்ஸின் சுபாவம், அதினுடைய நம்பர், லைசென்ஸுதாரனுடைய பெயர், (அன்னிய மதுவிஷயத்தில் தவிர) வழங்கும் விலை இவைகளை காட்டப்படவேண்டியது. இந்த விசேஷங்கள் அந்தந்த இடங்களில் வழங்கும் சுதேச பாஷையிலும் டாவரன், மொத்தவிற்பனை செய்யும் டெப்போக்கள் விஷயங்களில், இங்கிலீஷிலும்கூட ஸ்பஷ்டமாய் வர்ணத்தினால் எழுதப்பட்டிருக்கவேண்டியது. லைசென்ஸை உள்ளே தெரியும்படியான இடத்தில் தொங்கவிட்டு வைத்திருக்கவேண்டியது.

7. லைசென்ஸில் சொல்லியிருப்பவைகளையல்லாத மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துவையாகிலும் அல்லது ஒரு கம்பவுண்டிங் லைசென்ஸின் விதிகளின்படியிருந்தாலொழிய, மதுவில் வர்ணம் வாசனைக்கு உபயோகிக்கும் அல்லது உபயோகப்படுத்தத்தக்க எவ்வித எஸ்ஸென்ஸு அல்லது வஸ்துவையாகிலும் லைசென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

8. தேவைக்கு எவ்வளவு இருந்தால் போதுமென்று கலெக்ட்டர் அவர்கள் அபிப்பிராயப்படுகிறாரோ அவ்வளவு மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரிவஸ்துக்களை கடைகளிலும் டெப்போக்களிலும் வைத்திருக்கவேண்டியது.

9 காலையில் [illegible]-30 மணிக்கு முன் சாராயக்கடை, டாவரன், அல்லது பீர் கடை திறக்கக்கூடாது ; மற்ற இதர் டெப்போக்களையாவது கடைகளையாவது சூர்யோதயத்திற்கு முன் திறக்கக்கூடாது.

10. (a) டெப்போ அல்லது கடையை இரவு 8 மணிக்குமேல் பிரத்தியேகமான உத்தரவில்லாமல் திறந்துவைத்திருக்கக்கூடாது. எந்த டெப்போவையும் சூரியாஸ்தமனத்திற்கு மூடிவிடும்படி உத்திரவு செய்யவும், போலீசாருடைய ரிபோர்ட்டின்பேரிலாவது அல்லது மற்ற யாது தகுதியான காரணங்களுக்காவது எந்த கடையையும் பொது நன்மையை அனுசரித்து வழக்கமாய் மூடுகிற நேரத்திற்கு முந்தி மூடிவிடும்படி உத்திரவு செய்யவும் கலெக்டர்கள் அவர்களுக்கு அதிகாரமுண்டு. தகுந்த காரணங்களின்பேரில் ரெவின்யூ போர்டார் எந்த விதமான அல்லது எந்த விதங்களான அல்லது எல்லாவித அப்காரி அபினி லைஸென்ஸ் பெற்ற இடஙகளையும 8 மணிக்கு முந்தி மூடிவிடும்படி பொதுவாக உத்திரவு செய்யலாம்.

(b) குறிக்கப்பட்ட கடைகளை குறிப்பிட்ட திருவிழா காலங்களில் மூடிவைக்கவேண்டியதென்று எல காலத்தில் பிரசுரம் செய்ய கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. மேலும் மார்க்கெட அல்லது சந்தைகள் கூடும் இடங்களிலிருந்து 1 மைலுக்கு சமீபத்திலிருக்கும் கடைக்ள் விஷயத்தில் சந்தை நாள்களில் வழக்கப்படி விற்பனை செய்யும் நேரத்தை பொதுவாக குறைக்கப்படுமென்றாவது அல்லது ஷெ கடைகள் பொதுஜனங்கள் குடிப்பதை அதிகச்செய்வதாக தெரியவந்தால் இஜாரா நடுவில் விற்பனை நேரம் குறைக்கப்படுமென்றாவது பிரசுரம் செய்ய கலெக்ட்டர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அதிகமாய் தொழிலாளிகள் ஒன்றுசேரக்கூடிய பாக்டெரி, மில முதலான இடங்களுக்கருகாமையில் குறிப்பிட்ட கடைகளை யுக்தமானால் வேலை நாள்களில் காலை 11-30 மணி முதல் மாலை 1-30 மணி வரையிலும், சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் மாலையிலும், ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 11-30 மணிக்குமேல் 4 மணிவரையிலுள்ள நேரத்தைத்தவிர பாக்கி காலங்களிலும் கலெக்ட்டர் அவாகள் மூடிவிடும்படி உத்தரவு செய்யலாம். இப்படிப்பட்ட கடைக்காரர்களுக்கு கொடுக்கப்படும் லைஸென்ஸுகளில் இதுவிபரத்துக்கு ஒரு பிரத்தியேகமான நிபந்தனை கலெக்ட்டரவர்களால் சேர்க்கப்படும்.

11. தண்டுபோகிற மார்க்கத்திலாவது அதற்குப்பக்கத்திலாவது டெப்போ அல்லது கடைகள் இருந்தால் அவைகளை ரெஜிமென்டாகிலும் அதில் ஒரு துக்குடியாகிலும் போய்க்

கொண்டிருக்கையிலாவது சமீபத்தில் இறங்கியிருக்கையிலாவது கலெக்ட்டர் உத்தரவுபண்ணினால் மூடிவிடவேண்டியது. மதசம்பந்தமான ஏதாவது கலகம் சச்சரவு நேரிடுகிற சமயத்தில் கலெக்ட்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸர் கடைகளை மூடிவிட உத்திரவுசெய்யலாம். சமீபத்தில் ஏதாவது சச்சரவு கலகம் நேரிடும்பக்ஷத்தில் லைசென்ஸுதாரர்கள் தாங்களே டெப்போ அல்லது கடைகளை மூடிவிடவேண்டியது.

12. விற்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் மது, அபினி, கஞ்ஜா முதலிய லாகிரிவஸ்துக்கள் நல்ல சரக்காயும் கலப்பில்லாததாயுமிருக்கவேண்டியது. மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரிவஸ்துக்களின் லாகிரி தன்மையை அதிகப்படுத்துகிறதற்காவது வேறெந்த காரியத்திற்காவது எந்த வஸ்துவையும் சேர்க்கக்கூடாது. ஆனால் ஷை நிபந்தனை லைசென்ஸின் விதிகளின்படி கஞ்சா அபினியிலிருந்து லாகிரிவஸ்துக்களைச் செய்வதையாவது மதுக்களை கம்பவுண்டு, பிளண்டு பண்ணுவதையாவது தடுக்காது. பாட்லிங் லைசென்ஸின் விதிகளை யனுசரித்தன்றியில் மதுவானது புட்டிகளில் அடைக்கப்படக்கூடாது. பலவித மதுக்களைக் கலந்து அவைகளின் ஒன்றின் பெயரிட்டு விற்கவும்கூடாது.

13. அப்காரி அல்லது அபினிக்கடைகளில் மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்வதற்கு ஷை கடைக்காரர்களின் சொந்த குடும்பஸ்தர்களைத் தவிர வேறு யாதொரு ஸ்திரீகளையும் கலெக்ட்டருடைய பிரத்தியேகமான உத்தரவன்னியில் நியமிக்கக்கூடாது.

14. மது, அபினி அல்லது கஞ்ஜா முதலிய லாகிரி வஸ்துக்களை 18 வயதுக்குள்பட்ட சிறுவர்கள் அல்லது குஷ்டரோகம் அல்லது ஒட்டுவாரொட்டும்படியான வியாதியினால் அவஸ்தைப்படுகிறவர்கள் விற்பனைபண்ணுவது அல்லது கொண்டுபோவது கூடாது. அவைகளை விற்பனைபண்ணுவதற்காக லைசென்ஸ் கொடுக்கப்பட்ட கடைகளில் அல்லது டெப்போக்களில் மேலே விவரித்தவர்களை எந்த வேலையிலும் நியமிக்கக்கூடாது. கலெக்ட்டரவர்கள் முன்னுத்தரவின்றி இந்தியன் பினல்கோடின் பிரகாரம் தெண்டனைப்பட்டவர்களை மது, அபினி, கஞ்ஜாவை விற்பனை செய்யவாவது, கொண்டுபோகவாவது நியமிக்கக்கூடாது. டிவிஷனல் ஆபீஸர்கள் யுக்தப்படி டெப்போ அல்லது கடைகளில் வேலைக்கு வைக்கப்பட்டிருக்கிற அல்லது வேலைக்குவைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிற நபர்களின் பெயர்களை கேட்டனுப்பி அந்த நபர்களில் தமக்கு யார் இஷ்டமில்லையோ அவர்கள் மது, அபினி அல்லது சஞ்ஜா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கக்கூடாதென்று உத்தரவு செய்யலாம்.

15. (a) டிவிஷன் (அல்லது இண்டிபெண்டெண்டு ப்ரிகேட்) கமாண்டிங் ஆபீசராவது அல்லது கண்டோன்மெண்டு காம்பு கமாண்டிங் ஆபீசராவது பிரத்தியேகமாக அங்கீகரித்திருக்கிற கடைகள் தவிர மற்ற கடைகளில் யாதொரு—

(1) சர்க்கார் போர்க்கப்பலைச்சேர்ந்த ஸெயிலருக்காகிலும், சோல்ஜர் அல்லது அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவருக்காகிலும் ; அல்லது

(2) பாரெக்ஸில் வசிக்கும் மற்றவர்களுக்காகிலும் ;

(b) (1) கடையில் விற்பவர்களுக்கு தெரிந்த, அல்லது அவர்களால் அநுமானிக்கப்படுகிற, காம்ப் பாலோயர்களுக்கு (அதாவது சொந்த வேலைக்காரர்கள் தவிர்த்த, கண்டோன்மெண்டில் வசிக்க உரிமையுற்ற எல்லாவிதமான பாலோயர்களுக்கும், அவர்கள் அலுவல் செய்துகொண்டிருந்தாலும் சரி செய்யாமலிருந்தாலும் சரி) ;

(2) அலுவலிலிருக்கும் போலீஸ்தாரர்களுக்கும், எக்ஸைஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், ரெயில்வே வேலைக்காரர்களுக்கும் ;

(c) எக்காலத்திலும் யாதொரு—

(1) போலீஸாருடைய காவலில் போகிற யுரோப்பியன் (நாடோடி) வேக்ரண்டுக்காகிலும் ;

(2) பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவன் அல்லது சிறுமிக்காகிலும ;

(3) பைத்தியக்காரனுக்காகிலும் ; அல்லது

(4) லாகிரி வஸ்துக்களை சாப்பிட்டு வெறிகொண்டிருக்கிறானென்று அறியப்படுகிற அல்லது ஊகிக்கப்படுகிற எவனுக்காகிலும்

மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கவுங்கூடாது, கொடுக்கவுங்கூடாது. மேலே (a) பிரிவில் கண்டிருக்கிறவர்களுக்கு ஷை அதிகாரிகள் அந்தந்த ஊர் எக்ஸைஸ் அதிகாரிகளுடன் யோசித்து லைசென்ஸில் இன்னின்ன மது விற்கலாமென்று காணப்பட்டிருக்கும் பட்சத்தில் அவைகள் தவிர வேறு மதுக்களை விற்கக்கூடாது.

குறிப்பு.—இந்தியன் சிப்பாய்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்களுக்கும், அவர்களைப் பின்தொடர்பவர்களுக்கும், அவர்கள் தங்கள் ரெஜிமென்டைவிட்டு லீவின்மேலிருக்கும்போது (a), (b) குறிப்பிட்ட நிபந்தனைகள் சம்பந்தப்படமாட்டா.

16. கடைகளில் மது, அபினி அல்லது கஞ்ஜா முதலிய லாகிரிவஸ்துக்களை பணத்திற்குத் தவிர வேறொன்றுக்கும் விற்கக்கூடாது. பணம் தவிர வேறெந்த வஸ்துவையாவது கொடுக்கவந்தால் லைசென்ஸுதாரன் அதிசமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காவது போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதைத் தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கவேண்டியது. இந்த நிபந்தனையானது கடைகளுக்கு வெளியில் பானஞ்செய்வதற்கு சீமைச்சாராயம் கெடுகாளாக விற்பனைசெய்யும் கடைக்காரர்களும் கௌரவமுள்ள வர்த்தகர்களும் வர்த்தக முறைமையில் கடனாக விற்பனை செய்வதினின்று தடுப்பதற்கல்ல.

17. அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற சட்டத்தை அனுசரித்து விற்பனைக்காக ஏற்படுத்தப்படும் தாழ்ந்த விலைகளை * அல்லது உயர்ந்த விலைகளைக் †குறைத்தாவது உயர்த்தியாவது மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கக்கூடாது.

18. மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை லைஸென்ஸில்லாமல் வைத்துக்கொண்டிருப்பதற்காக அடியில் கண்டபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு மேல் ஊர்ஜ்ஜிதமுள்ள உத்தரவுச்சீட்டில்லாமல் யாதொரு லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடத்திலிருந்து ஒரே தடவையில் எவனையும் கொண்டுபோகும்படி அனுமதி கொடுக்கக் கூடாது அல்லது மது, மொத்த விற்பனை டெப்போக்களில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவுகளுக்குக் குறைவாய் விற்கக்கூடாது :—

சாராயம்.	கள்.	கஞ்ஜா.	அபினி.
ஒரு திராம் என்று பிரத்தியேகமாய் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான இடங்களில் தவிர மற்ற இடங்களில் காலனில் 6-ல் ஒரு பங்கு. நீலகிரி ஜில்லாவில் 4 திராம்.	ஒரு திராம் என்று பிரத்தியேகமாய் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான இடங்களில் தவிர மற்ற இடங்களில் 1 காலன், கர்னூல் முனிசிபாலிடியிலும், சேலம் முனிசிபாலிடியிலும் 24 திராம்.	ஏஜென்ஸி டிவிஷனில் கஞ்ஜா 10 தோலாவும், பங்கி 40 தோலாவும், இதர இடங்களில் கஞ்ஜா 5 தோலாவும், பங்கி 20 தோலாவும் மேற்கண்ட அளவு அடங்கிய லாகிரி வஸ்துக்களும்.	அபினி அல்லது அவைகளிலிருந்து செய்த மார்பியா அல்லது புகை குடிப்பதற்கு உபயோகமாயுள்ளவஸ்துக்களைத் தவிர மற்ற லாகிரி வஸ்துக்கள் ஏஜென்ஸி டிவிஷனில் 3 தோலாவுக்கு மேற்படாமலும் இதர இடங்களில் 1 தோலாவும்.

ராதாரிகள் அச்சடித்த புத்தகங்களிலிருக்கவேண்டியது. அப்புத்தகங்கள் எல்லா சால்ட்டு அப்காரி அண்டு கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டர் ஆபீஸுகளிலும் கிடைக்கும். அவைகளின் விலையை சர்க்கார் கஜானாவில் கட்டிவிட்டு ரசீதைக் கொண்டுபோய்க் கேட்கவேண்டும். பிற்பாடு உபயோகப்படுத்துவதற்காக விவரப் பதிவுகளில்லாத ராதாரிச் சீட்டுகளை கையெழுத்து செய்தல்கூடாது.

19. சால்ட், அப்காரி, செபரேட் ரிவினியு கமிஷனரவர்களால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்பட்ட நிறைகளையும் அளவைக்கருவிகளையும் மாத்திரம் யாதொரு லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களில் வைத்துக்கொண்டிருக்கலாம், அல்லது உபயோகப்படுத்தலாம். மேலும் கலெக்ட்டரவர்கள் உத்திரவுசெய்தால் அந்த கருவிகளை டிஸ்ட்ரிக்ட்டிலுள்ள முத்திரைகுத்தும் இலாகாவினால் பரிசோதித்து முத்திரை போடப்பட வேண்டியது.

20. டெப்போ அல்லது கடைகளில் யாரும் குடித்து வெறிகொள்வதும் தாறுமாறு பண்ணுவதும் சூதாடுவதும் கூடாது. டெப்போ அல்லது கடைகளில் எவ்விதமான கூத்து, ஆட்டம், தமாஷா முதலானதும் நடத்தக்கூடாது.

21. கடைகளிலும், டெப்போகளிலும கொள்ளைக்காரர்களுக்கும் திருடர்களுக்கும் கலகம்செய்பவர்களுக்கும் இருப்பிடம் கொடுக்கக்கூடாது ; அப்படி சந்தேகிக்கப்பட்டவர்கள் யாராவது அவைகளுக்கு வருகிறபட்சத்தில் அவர்களைக்குறித்து அதிசமீபத்திலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்காகிலும் போலீஸ் உத்தியோகஸ்தருக்காகிலும் அறிக்கைபண்ணவேண்டியது

22. இராக்காலத்தில் கடை அல்லது டெப்போவில் தங்குவதற்கு யாருக்கும் இடம் கொடுக்கக்கூடாது.

23. நிர்ணயிக்கப்பட்ட நமூனாவில் தினந்தோறும் இங்கியில் சரியான வரவுசெலவு கணக்குகள் வைக்கவேண்டியது. பிரத்தியேகமான உத்திரவில்லாவிடில் லைஸென்ஸு வாரியாக கணக்கு வைக்கவேண்டியது. கணக்குகள் அச்சடித்த புத்தகங்களில் இருக்கவேண்டியது. கணக்கு புத்தகங்களை அந்தந்த இடங்களிலிருக்கும் ரிவினியு உத்தியோகஸ்தர்களிடத்தில் விற்கும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். மது, அபினி அல்லது கஞ்சா முதலிய லாகிரிவஸ்துக்களோடு வருகிற ராதாரிகளையும் அவைகளுக்கு கொடுக்கப்பட்ட ராதாரிகளின் எதிரிடைகளையும் கணக்குகளிலுள்ள விபரங்களுக் கத்தாட்சியாக ஜாக்கிரதையுடன் ஒழுங்காய் சேர்த்துவைக்கவேண்டியது, கணக்குகளையும ராதாரி எதிரிடைகளையும் லைஸென்ஸில் கண்ட காலங்கடந்து ஒருவருஷம் வரையில் காப்பாற்றிவைத்து, சால்ட், அப்காரி அண்ட் கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தர்களில் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டருடைய அந்தஸ்துக்கு குறையாத ஒருஉத்தியோகஸ்தர் கேட்டால் ஆஜர்படுத்தவேண்டியது.

24. ஏலமன்றியில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுடைய லைஸென்ஸுகள் தவிர மற்ற லைஸென்ஸுகள் விஷயங்களில் கிரயத்துக்கு கொள்ளப்பட்ட சுதந்தரத்தின் தொகையானது ஒரு கவர்ன்மெண்டு கஜானாவில் பன்னிரண்டு மாதாந்திரத் தவணைகளில் ஏப்ரல்

* மதுக்கடைகளுக்கு—1921-ம் ஞு ஜனவரி மீ 24உ யுள்ள போர்டாரவர்களுடைய நோட்டிபிகேஷன் நெ. 4,1921-ம் ஞு ஜூலை மீ 16உ யுள்ள போர்டாரவர்களுடைய நோட்டிபிகேஷன் நெ. 13 ல் மாற்றப்பட்ட பிரகாரம் பார்க்கவும்.

† அபினிக்கடைகளுக்கு—ஏஜென்ஸி டிவிஷனில் ஒரு தோலாவுக்கு 15 அணாவாக நியமித்திருக்கிறது.

அல்லது அக்டோபர் மாதம் முதல்கொண்டு ஒவ்வொரு மாதமும் 10உக்குள் செலுத்தப்படவேண்டியது. அப்படி செலுத்தத்தவறின தொகைகளுக்கு வட்டிபோடப்படும். மதராஸ் டவுனில் 25உக்குப் பிறகும் மற்ற இடங்களில் 20உக்குப் பிறகும் கிஸ்தி செலுத்தத்தவறின கடைகள் மறு எலம் போடப்படும். கள்ளுக்கடைகள் மரவரிசெலுத்தத் தவறினதற்காகவும் மறு எலம் போடப்படலாம். டெப்போக்களுக்கு கட்டணம் முன்னதாகச் செலுத்தப்படவேண்டியது.

25. குத்தகைத்தொகையை தள்ளிவிடவேண்டுமென்றாவது அதைக் குறைக்கவேண்டுமென்றாவது கேட்பதற்கு எவ்விதத்திலும் சுதந்தரமில்லை.

26. கிஸ்திகள் அல்லது (கள்ளுவிஷயத்தில்) மரவரியுங்கூட கொடுக்கவேண்டிய தேதிகளில் கொடுக்கத்தவறுகிற விஷயத்தில் ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு லைஸென்ஸுகளை நிறுத்திவைக்க அதிகாரமுண்டு. இந்த அதிகாரமானது சாராயம், கள்ளு, கஞ்ஜா, பீர்கடைகள் டாவர்ன்ஸ் விஷயங்களில் தாசில்தார்களாலும், இண்டிபெண்டெண்டு சார்ஜிலிருக்கும் டிப்டி தாசில்தார்களாலும் அபினிக்கடைகள் விஷயங்களில் டிவிஷனல் ஆபீசர்களாலும் மற்ற லைஸென்ஸுகள் விஷயங்களில் கலெக்ட்டரவர்களாலும் செலுத்தப்படும். குத்தகை பாக்கிக் கொடுக்கத் தவறினதற்காக லைஸென்ஸு நிறுத்திவைக்கப்பட்டால் புது குத்தகைதாரனுக்கு லைஸென்ஸு பிறக்கும் தேதிமுதல் செலாவணியாய்வரும்படி விற்பனை சுதந்தரமானது மறு எலத்தில் விற்கப்படும் அல்லது கலெக்ட்டரவர்களுடைய யுக்தப்படி வேறுவிதமான எற்பாடு செய்யப்படும். நிறுத்திவைப்பதனாலும் மறுயேலம் அல்லது வேறுவிதமான எற்பாடு செய்வதனாலும் உண்டாகும் எல்லா நஷ்டங்களும் பாக்கிதாரனால் கொடுக்கப்படவேண்டியது. அப்படி செய்வதால் லாபம் எதாவது வந்தால் பாக்கிதாரனுக்கு அதில் யாதொரு பாத்தியமும் இல்லை. குத்தகையின் ஆரம்பத்தில் வைக்கப்பட்டிருக்கிற டிபாசிட்டு தொகை எதாவது இருந்தால் அது முழுமையும் சர்க்கார் தாக்கல் செய்யப்படும். லைஸென்ஸை நிறுத்திவைக்க அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர் யுக்தப்படி சுதந்தரத்தை மறுயேலம் அல்லது வேறே எற்பாடு செய்கிறவரையில் விற்பனை செய்ய உத்தரவு பண்ணலாம்.

27. கலெக்ட்டர் அவர்களின்முன் உத்தரவின்றி ஸர்ப்பரா அல்லது விற்பனைச் சுதந்தரத்தை விற்கவாவது, வேறொருவர்பேருக்கு மாற்றவாவது, உள்குத்தகைக்கு விடவாவது கூடாது. கலெக்ட்டர் அப்படி உத்தரவுசெய்யும்பட்சத்தில் அவருடைய அங்கீகாரம் பெறுவதற்குமுன் எவனையும் சுதந்திரத்தை நிர்வாகிப்பதற்கு எஜெண்டாக நியமித்துக் கொள்ளக்கூடாது.

28. (a) இண்டியன் ஸ்டேட் அல்லது அன்னியதேசத்துப் பிரதேசங்களில் உள்ள எந்த அப்காரி அல்லது அபினி லைஸென்ஸ்தாரன் பிரிடிஷ் பிரதேசத்தில் அதேமாதிரி வஸ்துவுக்குக்கொடுக்கப்பட்ட லைஸென்ஸில் கலெக்டருடைய விசேஷ உத்தரவில்லாமல் ஒருவிதமான பாத்தியதையும் வைத்துக்கொள்ளக்கூடாது.

(b) கலெக்டருடைய விசேஷ உத்தரவில்லாமல் பிரிட்டிஷ் பிரதேசத்தில் ஓரிடத்திலிருக்கும் எந்த அப்காரி அல்லது அபினி லைஸென்ஸுதாரனும் குறைந்த அல்லது அதிகமான தீர்வையுள்ள பிரிட்டிஷ் பிரதேசத்திலேயே மற்றொரு இடத்தில் அதே வஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட லைஸென்ஸில் யாதொரு பாத்தியதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட லைஸென்ஸு பெற்றுக்கொள்ளவும்கூடாது. கலெகட்டருடைய விசேஷ உத்திரவு வேண்டுவோர் தாமதமில்லாமல் கலெக்டருக்கு விண்ணப்பம்செய்து கொள்ள வேண்டியது. இந்த நிபந்தனையை மீறி நடக்கும் லைஸென்ஸுதாரன் தான் வைத்துக் கொண்டிருக்கும் எல்லா லைஸென்ஸுகள் விஷயத்திலும் நெ. 37-ம் நிபந்தனையில் காணப்பட்ட தண்டனைக்குள்ளாவான்.

29. லைஸென்ஸுதாரர்கள் டிவிஷனல் ஆபீஸரவர்களால் அப்போதைக்கப்போது கேட்கப்படும் கணக்குகளையும் சங்கதிகளையும் கொடுத்துக்கொண்டுவரவேண்டியது.

30. மது, அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உண்டுபண்ணுவதற்காவது கொண்டுபோவதற்காவது விற்பதற்காவது லைஸென்ஸுதாரர்கள் வேலையில்வைத்துக் கொண்டிருக்கிறவரெவர்களாகிலும் அப்காரி/அபினி சட்டதிட்டங்களை மீறி நடந்திருப்பதாக லைஸென்ஸுதாரர்களுக்குத் தெரியவந்தால், லைஸென்ஸுதாரர்கள் அதை டிவிஷனல் ஆபீஸருக்கு தெரியப்படுத்தவேண்டியதுமல்லாமல் அப்படிப்பட்டவர்களை வேலையில் இன்னும் வைத்துக்கொண்டிருப்பதைக்குறித்து டிவிஷனல் ஆபீஸர் என்ன உத்தரவுசெய்கிறாரோ அந்தப்படி நடந்துகொள்ளவும்வேண்டியது.

31. லைஸென்ஸுதாரர்கள் ஸால்ட், அப்காரி அண்ட் கஸ்ட்டம்ஸ் இலாகா உத்தியோகஸ்தர்களிடத்தில் பண விஷயமான எவ்வித லாவாதேவியும் வைத்துக்கொள்ளக்கூடாது.

32. கலெக்ட்டருக்கு யுக்தமாகத்தோன்றினால் ரெவினியு போர்டாருடைய அனுமதியின்மேல் பதினைந்துநாளுக்கு முன்பாகவே லைஸென்ஸுதாரனுக்கு நோட்டீசு கொடுத்து எந்த லைஸென்ஸையும் ரத்துசெய்ய கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு. அவ்வாறு நடக்கும் விஷயத்தில் லைஸென்ஸுதாரன் செலுத்தியிருக்கிற கட்டணத்தில் தாமாஷா வீதப்படி எற்படுகிற அளவுக்கு அவனுக்குத் தொகை வாபிஸ்செய்துவிடப்படும்.

33. எல்லா லைஸென்ஸுதாரர்களும் அப்காரி/அபினி சட்டதிட்டங்களின்கீழ் சேர்க்கையாக பின்னும் எதாவது விதிகள் நிர்ணயிக்கப்பட்டால் அவைகளுக்கு உள்ளாகவேண்டியதுமல்லாமல் கலெக்ட்டராவது அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது லைஸென்ஸைக் கொடுத்துவிடச்சொல்லி உத்தரவு செய்யும்பட்சத்தில், அப்பிர

காரமே அதில் திருத்துப்பாடு செய்யும்பொருட்டாகிலும் வேறே லைசென்ஸு பிறப்பிக்கப் படும் பொருட்டாகிலும் தன்னுடைய லைசென்ஸுகளைக் கொடுத்துவிடவேண்டியது.

34. லைசென்ஸுபெற்ற கடைகளையும் டெப்போக்களையும் பார்வையிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர்கள்—

(1) ரெவினியு இன்ஸ்பெக்ட்டர் அந்தஸ்துக்குக் கீழ்ப்படாத யாதொரு ரெவினியு உத்தியோகஸ்தரும்,

(2) சப் இன்ஸ்பெக்ட்டர் அந்தஸ்துக்குக் கீழ்ப்படாத யாதொரு ஸால்ட், அப்காரி அண்டு கஸ்ட்டம்ஸ் உத்தியோகஸ்தரும்,

இந்த உத்தியோகஸ்தர்கள் உள்ளேபோகவும் பரிசோதனைசெய்யவும் வழங்கிக்கொண்டிருக்கிற நிறைகளையும் அள்வைக்கருவிகளையும் லைசென்ஸுதார்கள் சுவாதீனத்திலிருக்கும் மது, அபினி, கஞ்சாமுதலிய லாகிரிவஸ்துக்களையும் பரிசோதனைசெய்யவும், கடை அல்லது டெப்போவில் வைக்கப்பட்டிருக்கும் கணக்குகளை வரவழைக்கவும் சோதிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கின்றார்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய அலுவலில் சம்பந்தப்படுங்கால் பார்வையிடலாம்.

35. டெப்போ அல்லது ஷாப்புகளை பரிசோதனைபண்ண அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர்கள் யாவரும் சாப்பிடுகிறதற்கு அல்லது உபயோகிப்பதற்கு உதவாதென்று காணப்பட்ட அல்லது மேலே 12-வது நிபந்தனையில்கண்டபடி எவ்விதத்திலாவது கலப்பிடப்பட்டதென்று தோற்றப்படுகிற மது, அபினி அல்லது கஞ்ஜா முதலிய லாகிரிவஸ்துக்களை நிறுத்தலாம். கலெக்ட்டர்களும், சால்ட், அப்காரி அண்டு கஸ்ட்டம்ஸ் டிபார்ட்மெண்டைச்சேர்ந்த டிப்டி கமிஷனர், அஸிஸ்டன்டு கமிஷனர்களும் சாப்பிடுவதற்கு அல்லது உபயோகப்படுத்துவதற்கு உதவாதென்று காணப்படுகிறவாவது அல்லது கலப்பிடப்பட்ட எவ்விதமான மது, அபினி, கஞ்ஜா முதலிய லாகிரிவஸ்துக்களையும், வேறுவிதமான மதுவுடன் கலக்கப்பட்டு ஒரு தின் பெயரிடப்பட்டு விலைக்கு விற்கப்படுகிற எல்லாவித மதுவையும் பரிமுதல் செய்யவாவது அழித்துவிடவாவது அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

36. பரிசோதனைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் அபிப்பிராயத்தை குறிக்கவேண்டியதற்காக பரிசோதனாபுஸ்தகம் ஒன்று வைத்திருக்கவேண்டியது. அதினுடைய ஏடுகள் கிரமமாய் லக்கம்போட்டு வைத்திருக்கவேண்டியது. அந்த புஸ்தகத்தை சர்க்கில் இன்ஸ்பெக்டரவரிடமாவது அவரால் நியமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடமாவது அதற்காக ஒரு ரசீது கொடுத்தபோது கொடுத்துவிடவேண்டியது.

37. லைசென்ஸுதாரனாவது அல்லது அவனால் நியமிக்கப்பட்ட எந்த மனுஷனாவது லைசென்ஸின் எந்த நிபந்தனையையேனும் மீறிநடந்தால் லைசென்ஸுதாரன் பின்வரும் தண்டனைக்கு பாத்திரனாவான் :—

(a) 50 ரூ வரையில் அபராதம்—

இதுவாவது அல்லது,

(b) லைசென்ஸை ரத்துபண்ணுவதும் தவிர சுதந்தரத்தை மறுயேலம்போடுவது அல்லது வேறு ஏற்பாடுசெய்வது. அதினாலுண்டாகிற சகல நஷ்டத்திற்கும் லைசென்ஸுதாரன் உட்படவேண்டியது. கலெக்ட்டரவர்களுக்கு அவசியமென்று தோன்றினால் கட்டியிருக்கும் டேவணியை சர்க்கார் தாக்கலாய்விடலாம்.

(c) லைசென்ஸுதாரன் அல்லது அவனுடைய ஏஜென்டின்மேல் குறிப்பான குற்றத்திற்குப் பிராது தொடரலாம்.

இந்த நிபந்தனையின்கீழ் குத்தகைச்சீட்டு ரத்துசெய்துவிடப்பட்டால் குத்தகைக்கால் முழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகைத்தொகையானது உடனே பாக்கியாய்விடும்.

குறிப்பு—லைசென்ஸின் இடைவிடாத தவறுதலுக்கு இடைவிடாத அபராதம் விதிக்கப்படும்.

38. லைசென்ஸுதாரன் $\frac{\text{அப்காரி}}{\text{அபினி}}$ ஆக்ட்டின்கீழாவது அல்லது இந்தியன் பினல்கோட் சட்டத்தின்கீழாவது ஏதாவதொரு குற்றஞ்செய்ததாய் ஒரு மாஜிஸ்திரேட்டினால் தீர்மானிக்கப்பட்டு அவன் செய்த குற்றத்தினால் லைசென்ஸை பெற்றிருக்கத்தகுந்தவனல்லவென்று கலெக்ட்டர் அபிப்பிராயப்பட்டாலும் அல்லது லைசென்ஸுதாரன் மேலே சொல்லப்பட்ட ஏதாவதொரு குற்றத்திற்காக ஒரு மாஜிஸ்டிரேட்டினால் லைசென்ஸு கொடுப்பதற்கு முன்னமே தண்டிக்கப்பட்டதாக கலெக்ட்டருக்கு தெரிவிக்கப்படும் பக்ஷத்தில், லைசென்ஸு இழக்கப்பட்டு சுதந்திரமானது மறுயேலம் போடப்படும், அல்லது வேறு விதமான ஏற்பாடு செய்யப்படும். அதினாலுண்டாகிய நஷ்டத்திற்கு லைசென்ஸுதாரன் பாத்தியப்படவேண்டியது.

39. லைசென்ஸுதாரனால் கொடுக்கப்படவேண்டிய எந்த தொகையும் குத்தகை டிபாசிட்டு ஏதாவது வைத்திருந்தால் அதிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் அல்லது ரிவினியூ ரிகவரி ஆக்டின்படி லாண்டு ரிவினியூ பாக்கியைப்போல் வசூல்செய்யலாம். டிபாசிட்டிலிருந்து ஏதாவது தொகைகளைக்கழித்து எடுத்துக்கொள்ளும்பட்சத்தில் தாசில்தார் அல்லது இண்டிபெண்டெண்ட சார்ஜில் இருக்கும் டிப்டி தாசில்தாரால் அனுப்புகிற நோட்டீசை பெற்றுக்கொள்ளுகிற தேதிமுதல் பதினைந்து தினத்திற்குள் அந்த தொகைகளை கட்டிவிடவேண்டியது.

40. லைசென்ஸுதாரன் பாக்கியாயிருக்கிற எல்லாத்தொகைகளுக்கும வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 6 விழுக்காடு வட்டிசெலுத்தவேண்டியது.

41. ரெவின்யூ போர்டாரால் ஏற்படுத்தப்படும் சங்கியைக்கு உட்பட்டு கலெகட்டர் அவர்களுக்கு யுக்தப்படி இஜாரா ஆரம்பத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு டெப்போ அல்லது கடைகளை மாற்றவும் அவைகளை மூடவும் புதிதாய் டெப்போக்கள் கடைகள் இவைகளை திறப்பதற்கும் அதிகாரமுண்டு. ஆனால் குத்தகைகாலம் ஆரம்பிப்பதற்கு ஆறு மாதத்திற்கு முந்தியே ஜில்லாகெஜெட்டில் புதிதாய்த் திறக்கும் கடைகளின் இடத்தைப்பற்றி விளம்பரஞ் செய்திருந்தாலொழிய அவைகளைத் திறக்கவுங்கூடாது; போர்டாருடைய் பிரத்தியேகமான உத்திரவில்லாமல் ஒரு குத்தகை காலத்தில் சமீபத்திலே யிருக்கிற கடைக்காரர்களின் நன்மைக்கு விரோதமான மாறுதல்கள் செய்யவுங் கூடாது. தாசில்தார் விற்பனை நோட்டீஸில் கடைக்காக ஏற்படுத்திய எல்லைக்குள் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு அதை மாற்ற உத்திரவு அளிக்கலாம்.

42. எவைகளுக்கருகாமையில் கிரமமாய் லைஸென்ஸுபெற்ற கடைகள் இல்லையோ அந்த இடங்களில் சந்தை, திருவிழாமுதலியவை நடக்குங்காலத்தில் மது, அபினி, கஞ்ஜா முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்பனைசெய்வதற்காக "காலாகாலத்து லைஸென்ஸுகள்" கொடுக்குஞ் சுதந்தரம் கலெக்டர் தாமே உடையவராயிருக்கிறார். இவ்வித லைஸென்ஸுகள் கண்டிப்பாய் அத்தியாவசியமாயிருக்கும்போதுதான் கொடுக்கப்படும். அந்த ஜாகாவில் எந்த கடைக்காரர்கள் சப்ளை செய்கிறார்களோ அவர்களுக்கு அந்த லைஸென்ஸுகள் சாதாரணமாய் கொடுக்கப்படும். பத்துநாளைக்கு அதிகப்படாமல் வேண்டிய தினங்களுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்படும். போர்டாருடைய உத்தரவின்றி எந்த சந்தை அல்லது திருவிழாவுக்கும் ஒரு லைஸென்ஸுக்கு மேலகொடுக்கக்கூடாது. லைஸென்ஸுகளுக்காக கொடுக்கப்படவேண்டிய கட்டணம் கலெக்டர்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி நிர்ணயிக்கப்படும்.

நாட்டுச்சாராய லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்.

1. இந்த சுதந்தரமானது நிர்ணயிக்கப்பட்ட காரமுள்ள நாட்டுச்சாராயத்தை விற்கத்தான் சம்பந்தப்படும். அவை யென்னவென்றால் 40 டிக்ரி குறைந்த காரமுள்ள சாராயம் விற்கவேண்டிய தென்னாற்காடு ஜில்லாவில் சேர்ந்த பிரஞ்சு மாகாணத்திற்கு அடுத்த டிராக்ட்டுகளில்தவிர மற்ற இடங்களில் 35 டிக்ரி குறைந்தகாரம் 60 டிக்ரி குறைந்த காரம். ஏஜென்ஸி டிவிஷனைச்சேர்ந்த குனுபூர், பால்கொண்டா ஏஜென்ஸிகளிலும், போலாவரம், சோடாவரம், யெல்லாவரம் தாலூக்காக்களிலும் 60 டிக்ரி குறைந்த காரமுள்ள சாராயம் மாத்திரம் விற்கப்படும்.

2. ஒவ்வொரு ஜில்லாவிற்காக கண்ட்ராக்டு சப்ளைதாரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிஸ்டிலெரி அல்லது வேர் அவுஸ்களிலிருந்தும் அல்லது கண்ட்ராக்டு சப்ளைக்காரர் அல்லது அவர்களுடைய அனுமதியின்மேல் ப்ரைவேட் மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட மொத்த விற்பனை டெப்போக்களிலிருந்தும் சாராயத்தை கிரயத்துக்குக்கொள்ளலாம். பலவித ஜில்லாக்களிலுள்ள டிஸ்டிலெரிகள், வேர் அவுஸ்கள் அல்லது ஓல்சேல் டெப்போக்களில காலன் ஒன்றுக்கு சாஜ் செய்யப்படும் கிரயங்கள் அடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

ஜில்லா.	சப்ளை உற்பத்திஸ்தானம்-டிஸ்டிலெரி, வேர் அவுஸ் அல்லது ஓல்சேல் டெப்போ.	சாராய தினுசு.	35° குறைந்த காரமுள்ளது.	60° குறைந்த காரமுள்ளது.
			ரூ. அ. ப.	ரூ அ. ப.
1. கஞ்சம் (சாதாரண டிராக்டுகளும் ஏஜென்ஸிடிராக்டுகளின் 122 கிராமங்களும்).	ஆஸ்கா டிஸ்டிலெரி ...	பாகு சாராயம்	1 5 0	0 12 11
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	1 9 6	1 1 5
2. விசாகபட்டணம் (சாதாரண டிராக்டுகளும் ஏஜென்சி டிராக்டுகளின 137 கிராமங்களும்).	விசாகபட்டணம் டிஸ்டிலெரி.	வெல்ல சாராயம்	1 14 6	1 2 9
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	2 3 0	1 7 3
* குனுபூர் ஏஜென்ஸி (காண்ட், சவராமலைகள் தவிர).	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	...	1 10 3
* பாலகொண்டா ஏஜென்ஸி	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	...	1 7 3
* ஏஜென்ஸி டிவிஷன் (போலாவரம் டிவிஷனில 20 கிராமங்கள் தவிர மீதி பாகம், யெல்லாவரம், சோடாவரம்).	சாமல்கோட் டிஸ்டிலெரி.	பாகு சாராயம்	...	0 12 3
	ஓல்சேல் டெப்போ ...	ஷை..	...	1 3 9
	சாமல்கோட் டிஸ்டிலெரி.	ஷை.	1 4 0	0 12 3
3. கோதாவரி.	திட்டவோல் வேர் அவுஸ்	ஷை.	1 5 9	0 13 5
4. கிருஷ்ணா— நரசாபூர், பீமவரம், தனுகு, எல்லூர், எர்ணகூடம் தாலூகாக்கள்.	சாமல்கோட் டிஸ்டிலெரியிலிருந்து சப்ளை செய்யப்பட்ட ஓல்சேல் டெப்போ.	ஷை.	1 7 0	0 15 3
	திட்டவோல் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்பட்ட ஓல்சேல் டெப்போ.	ஷை.	1 8 9	1 0 5
குடிவாடா கெயிகலுரு நஸ்விட் தாலூகா.	திட்டவோல் வேர் அவுஸ்	ஷை.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	1 8 9	1 0 5

* சைதாபேட்டை தாலூகாவுக்கும், முனகாலா, விங்கிரி ஜமீனகளுக்கும, ஏஜென்ஸி டிவிஷனைச்சேர்ந்த குனுபூர், பால்கொண்டா ஏஜென்ஸிகளுக்கும், போலாவரம், சோடாவரம், யெலலாவரம் தாலூக்காக்களுக்கும் சப்ளை செய்யப்பட்ட சாராயத்திற்கு வர்ணம் கொடுக்கப்படும்.

ஜில்லா.	சப்ளை உற்பத்திஸ்தானம்-டிஸ்டிலெரி, வேர் அவுஸ் அல்லது ஓல்சேல் டெப்போ.	சாராய தினுசு.	35° குறைந்த காரமுள்ளது.	60° குறைந்த காரமுள்ளது.
4. கிருஷ்ணு—தொடர்ச்சி.			ரூ. அ. பை.	ரூ. அ. பை.
* ஜில்லா மீதிபாகத்திற்கு ...	பெஸ்வாடா வேர் அவுஸ்	பாகு சாராயம்	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 8 9	1 0 5
5. குண்டூர்— குண்டூர், நரசராவ்பேட், சத்தனப்பள்ளி, பாலநாட், வினுகொண்டா தாலூகாவிற்கு.	பெஸ்வாடா வேர் அவுஸ்	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ	ஷி.	1 8 9	1 0 5
(a) தினுவி, ரேபல்வி, பாபட்வா, ஒங்கோல் தாலூகாவிற்கு.	பெஸ்வாடா வேர் அவுஸ்	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 8 9	1 0 5
6. நெல்லூர்	நெல்லூர் வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 11 9	1 3 5
7. கடப்பை	கடப்பை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 10 3	1 1 11
8. அனந்தபூர்— கதிரி தாலூகா	கடப்பை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 12 9	1 4 5
ஜில்லா மீதிபாகத்திற்கு	தாட்பத்திரி டிஸ்டிலெரி.	வெல்ல சாராயம்	1 14 6	1 2 9
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	2 5 6	1 9 9
9. பல்லாரி	பல்லாரி டிஸ்டிலெரி ...	ஷி.	2 0 0	1 3 8
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	2 6 9	1 10 5
10. கர்நூல் (பங்கனபல்லி ராஜ்ஜியம் உள்பட).	நந்தியால் வேர் அவுஸ் ...	ஷி.	2 1 0	1 4 4
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	2 7 0	1 10 4
11. *மதராஸ் டவுன் சர்க்கில் ...	மதராஸ் வேர் அவுஸ் ...	ஷி.	2 0 0	1 3 8
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	2 4 6	1 8 2
12. † செங்கல்பட்டு (சைதாபேட்டை தாலூகா தவிர).	ஓல்சேல் டெப்போ ...	பாகு சாராயம்	1 7 0	0 15 11
13. சித்தூரு— மதனபல்லி வாயல்பாடு தாலூகா.	கடப்பை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 10 3	1 1 11
ஜில்லா மீதிபாகத்தில் ...	இராணிப்பேட்டை வேர் அவுஸ்.	ஷி.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 7 3	0 15 6
14. வட ஆற்காடு— (திருப்பத்தூர், திருவண்ணுமலை தாலூக்காக்கள் தவிர).	இராணிப்பேட்டை வேர் அவுஸ்.	ஷி.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 7 3	0 15 6
திருப்பத்தூர் தாலூகா ...	சூரமங்கலம் வேர் அவுஸ்	ஷி.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 7 3	0 15 6
திருவண்ணுமலை தாலூகா	நெல்விகுப்பம் டிஸ்டிலெரி	ஷி.	1 2 6	0 11 5
	ஓல்சேவ டெப்போ ...	ஷி.	1 5 6	0 14 5
15. ‡ தென்னுற்காடு (உயர்ந்த தீர்வையுள்ள ஸ்தலங்கள்).	நெல்விகுப்பம் டிஸ்டிலெரி	ஷி.	1 2 6	0 11 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 5 6	0 14 5
16. தஞ்சாவூர்	தஞ்சாவூர் வேர் அவுஸ்...	ஷி.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 7 3	0 15 6
17. திருச்சினுப்பள்ளி— (b) ...	திருச்சினுப்பள்ளி வேர் அவுஸ்.	ஷி.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 7 3	0 15 6
18. மதுரை	மதுரை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 10 3	1 1 11
19. இராமநாதபுரம்— இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்கள்.	மதுரை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல் டெப்போ ...	ஷி.	1 10 3	1 1 11
சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா.	மதுரை வேர் அவுஸ் ...	ஷி.	1 5 9	0 13 5
	ஓல்சேல்டெப்போ ...	ஷி.	1 8 6	1 0 9

* சைதாப்பேட்டை தாலூகாவுக்கும் முனகாலா, லிங்கிரி ஜமீன்களுக்கும் ஏஜென்ஸி டிவிஷனைச் சேர்ந்த குனுபூர் பால்கொண்டா ஏஜென்ஸிகளுக்கும், போலாவரம், சோடாவரம், யெல்லாவரம் தாலூக்காக்களுக்கும் சப்ளை செய்யப்பட்ட சாராயத்திற்கு வர்ணம் கொடுக்கப்படும்.

† செங்கல்பட்டு ஜில்லாவிலிருக்கும் (சைதாப்பேட்டை தவிர) டெப்போக்களுக்கு நெல்விகுப்பம் டிஸ்டிலரியிலிருந்து 35 டிக்ரி குறைந்த காரமுள்ள சாராயத்திற்கு காலன் ஒன்றுக்கு ரூ. 1-2-6 ம் 60 டிக்ரி குறைந்த காரமுள்ள சாராயத்திற்கு ரூ. 0-11-5 ம் செலுத்தி சரக்கு வரவழைத்துக்கொள்ளலாம்.

‡ இந்த ஜில்லாவில் ப்ராண்டியர் ட்ராக்டுகளுக்கு சப்ளை செய்யப்படும் சாராயம் வர்ணம் கொடுக்கப்பட்டும் 40 டிக்ரி குறைந்த காரமுள்ளதாயுமிருக்கவேண்டும். நெல்விகுப்பம் டிஸ்டிலெரியிலிருந்து ஷி ப்ராண்டியர் ட்ராக்டுகளிலுள்ள ஓல்சேல் டெப்போகளுக்கு சப்ளை செய்யப்பட்ட சாராயமும், ஷி டெப்போகளிலிருந்து கடைகளுக்கு சப்ளை செய்யப்பட்ட சாராயமும் 40 டிக்ரி குறைந்த காரமுள்ளதாயும் விற்கும் விலைமுறையே காலன் 1-க்கு ரூ. 1-1-1 ம் ரூ. 1-4-1 ம். இந்த ட்ராக்டுகளில் கடைகளுக்கு சப்ளை செய்யப்படும் சாராயம் ஓல்சேல் டெப்போகளிலிருந்துதான்.

(a) தெனுவி, ரேபல்வி, செருகுபல்வி, பாபட்லா, பரச்சூர் இந்த இடங்களில் தவிர மற்ற இடங்களிலிருக்கிற ஓல்சேல் டெப்போக்களுக்கு நெல்லூர் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படலாம்.

(b) ஜெயங்கொண்டசோழபுரம் டெப்போ தஞ்சாவூர் வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும்.

ஜில்லா.	சப்ளை உற்பத்திஸ்தானம்-டிஸ்டிலெரி, வேர் அவுஸ் அல்லது ஓல்சேல் டெப்போ.	சாராய தினுசு.	35° குறைந்த காரமுள்ளது.	60° குறைந்த காரமுள்ளது.
			ரூ. அ. பை.	ரூ. அ. பை.
20. திருநெல்வேலி	தச்சநல்லூர் டிஸ்டிலெரி (நாடார்).	வெல்ல சாராயம்.	1 6 6	0 13 10
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	1 11 0	1 2 4
21. கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் டிஸ்டிலெரி.	ஷை.	1 8 0	0 14 9
	ஓல்சேல் டெப்போ. கொல்லீகல் தாலூகாவில்.	ஷை.	1 14 0	1 4 9
	ஓல்சேல் டெப்போ. ஜில்லா மீதி பாகத்தில்.	ஷை.	1 12 6	1 3 3
22. நீலகிரி	கூனூர் வேர் அவுஸ் ...	ஷை.	1 15 0	1 3 1
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	2 3 6	1 7 7
23. சேலம்	சூரமங்கலம் வேர் அவுஸ்	பாகு சாராயம்	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	1 8 9	1 1 0
24. தென்கன்னடம்	மங்களூர் அல்லது உடுப்பி வேர் அவுஸ்.	ஷை.	1 5 0	0 12 11
	ஓல்சேல் டெப்போ ...	ஷை.	1 8 9	1 0 8
25. மலையாளம் (வைநாடு தாலூகா தவிர).	ஓலவக்கோடு வேர் அவுஸ்.	ஷை.	1 4 3	0 12 6
	ஓல்சேல் டெப்போ. பி. கொச்சி ...	ஷை.	1 11 0	1 3 3
	ஓல்சேல் டெப்போ. இதர டெப்போ.	ஷை.	1 8 0	1 0 3
26. வைநாட் தாலூகா (மலையாளம்) ...	கன்ட்ராக்ட்தாரர்களுடைய ஓல்சேல் டெப்போக்கள்.	ஷை.	2 2 0	1 4 11

3. டிஸ்டிலரிகளிலிருந்தும், வேர் அவுஸ்களிலிருந்தும் டெப்போக்களுக்கும் ஷாப்புகளுக்கும் ஸப்ளை செய்யப்படும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை டிஸ்டிலருடைய அல்லது வேர் அவுஸ் கீப்பருடைய செலவில் டிஸ்டிலரி ஆபீஸரும் வேர் அவுஸ் ஆபீஸரும் ஸீல்செய்யவேண்டும். டெப்போக்களிலிருந்து ஷாப்புகளுக்கு அனுப்பப்படும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை டெப்போ கீப்பர் தன்னுடைய செலவில் கெட்டியாய் ஸீல் செய்யவேண்டும். சாராயக் கடைக்காரர்கள் ஓல்சேல் டெப்போக்களிலிருந்தும், டிஸ்டிலரிகளிலிருந்தும், வேர் அவுஸ்களிலிருந்தும் ஸப்ளை செயயப்படும் சாராயத்தை கொண்டு போக சரியாகமூடும்படியானதும், ஸீல்செய்யும்படி அனுகூலமாயுள்ளதுமான ஜாடி அல்லது மற்ற எந்த பாத்திரங்களையாவது வைத்துக்கொள்ளவேண்டியது. மேலே சொன்னபடி மூடும்படியானதும், ஸீல்செய்யத்தகுந்ததாயுமுள்ள பாத்திரங்களில்லாமல்போனால், டிஸ்டிலரி அல்லது வேர் அவுஸ் ஆபீஸர் அல்லது டெப்போ கீப்பர் சாராயம் ஸப்ளை செய்யக்கூடாது. கண்டிராக்ட்டு சப்ளைக்காரர்கள், மொத்த விற்பனை டெப்போ கீபர்கள், சரியான நாணய விலைகொடுத்ததின்பேரில் அவர்களிடத்திலிருந்து வாங்குகிறதற்கு லைஸென்ஸ் பெற்ற எல்லா மனிதர்களுக்கும் விற்கவேண்டியது. மொத்தவிற்பனைகாரர்கள் எந்த தினுசு சாராயம் விற்க லைஸென்ஸ் பெற்றூர்களோ அதே தினுசு சாராயத்தை எந்த நிர்ணயிக்கப்பட்ட காரத்திலும் மனுசெய்துகொண்ட வரிசைக்கிரமமாய் மனுதாரர்களுக்கு தாமசமின்றி டிஸ்டிலெரி அல்லது வேர் அவுஸிலிருந்து சப்ளை செய்யப்படும். டிஸ்டிலெரியிலிருந்தாவது வேர் அவுஸிலிருந்தாவது ஐந்துமைல் தூரத்துக்குள்ளிருக்கும் கடைக்காரர்களுக்கு மட்டும் ஷை டிஸ்டில்லரி அல்லது வேர் அவுஸிலிருந்து சாராயம் பெற்றுக்கொள்ள பாத்தியமுண்டு. ஆனால் கடைகளுக்கு ஸப்ளை செய்யப்படும் சாராயம் 2-வது நிபந்தனையிலும் அதின் குறிப்பிலும் டேபிலிலும் சொல்லியிருக்கும் சப்ளை உற்பத்திஸ்தான விதிகளை அனுசரித்துதான் இருக்கவேண்டும்.

4. ஒரு தடவையில் வாங்கும் அளவுகள் கீழே சொல்லிய குறைந்த அளவுக்கு கீழே போகக்கூடாது :—

வாங்கும் மனிதர்கள்.		டிஸ்டிலெரி அல்லது வேர் அவுஸிலிருந்து.	மொத்தவிற்பனை டெப்போக்களிலிருந்து.
டிஸ்ட்டில்லரி அல்லது வேர் அவுஸிலிருந்து ஐந்துமைல் தூரத்துக்குள்ளிருக்கும் சுயாதீன கடைக்காரர்கள்.	டிப்போக்கள் இருக்கும் இடங்களில்.	இருபத்தைந்து காலன.	அரை காலன்.
	இதர இடங்களில் ..	ஐந்து காலன் ..	அரை காலன்.
மற்ற பிரதேசங்களிலிருக்கும் சுயாதீனகடைக்காரர்கள்.		......	அரை காலன்.
மொத்தவிற்பனை டெப்போ கீபர்கள்		ஒன்பது காலன் ..	ஒன்பது காலன்.

5. டிஸ்டிலர்களினாலேயும் வேர் அவுஸ்தாரர்களினாலேயும் சார்ஜ் பண்ணப்படும் விலைகளானது காலன் ஒன்றுக்கு பின்னால் விதிக்கப்படும் எக்ஸைஸ் டேடியை தவிரத்தான் :—

ஜில்லாக்கள்.	35° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு.	40° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு.	60° குறைந்த காரமுள்ள சாராயத்துக்கு.
	ரூ. அ. ப.	ரூ. அ. ப.	ரூ. அ. ப.
இமே குறிக்கப்பட்ட விடங்கள் தவிர மற்றப்படி ராஜதானியிலுள்ள எக்ஸைஸ் ட்ராக்ட்டுகள்.	5 7 9	..	3 2 0
கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஜில்லாக்களும், மதராஸ் ரிவினியு டிஸ்ட்ரிக்ட்டும் செங்கல்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த சைதாப்பேட்டை தாலூகாவும்.	6 14 6	..	4 0 0
தென் ஆற்காடு ஜில்லா (புதுச்சேரிக்கருகாமையிலிருக்கிற ட்ராக்ட்டுகள்).	..	3 12 0	..
கிருஷ்ணா ஜில்லாவில் முனகாலா, விங்கிரி ஜமீன்கள் ..	3 4 0	..	1 12 0
சவரா ஏஜென்ஸியின் குனுப்பூர், பாலகொண்டா தாலூகாக்கள்.	..	..	0 6 0
ராம்பா ஏஜென்ஸியின் எக்ஸைஸ் டிராக்டுகள்	..	..	0 14 0

குறிப்பு.—குறைந்தகாரமுள்ள சாராயம் குடிப்பது விருத்தியாகவேண்டுவது பற்றியே 60° குறைந்த காரமுள்ள சாராயத்தின் விலை சரஸஞ்செய்யப்பட்டிருக்கிறது.

6. கான்ட்ராக்ட் ஸப்ளையருடைய டிஸ்டிலரி வேர்அவுஸிலிருந்து வாங்கப்படும் சாராயத்தின் தீர்வை கவர்ன்மெண்டு கஜானாவில் முன்னதாகவே செலுத்தவேண்டியது. ஆனால் கான்ட்ராக்ட் சப்ளைக்காரர் முன்னதாகவே டிரஷரியில் அட்வான்சு பணம் கட்டியிருந்தால் அந்தக்கணக்கு தொகை கழியும் வரையில் தீர்வை அவரிடத்திலேயே கட்டிப்போடலாம். வாங்கப்படும் சாராயக்கிரயத்தை கான்ட்ராக்டு சப்ளையரிடத்திலேயே கட்டவேண்டும்.

7. மொத்த விற்பனை டெப்போக்காரர்களிடத்தில் சாராயம் கொள்ளப்பட்டால் எக்ஸைஸ் தீர்வையை கொள்கிரயத்துடன் மொத்தவிற்பனைக்காரரிடத்தில் செலுத்திவிடவேண்டியது.

சாராய மொத்தவிற்பனைபண்ணும் டெப்போ லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.

1. டெப்போவிலுள்ள ஒவ்வொரு பீப்பாயின் பரிமாணத்தையும் அதன்மேல் தெளிவாய் செதுக்கி அல்லது சூட்டுக்கோலால் குறித்து அல்லது வர்ணத்தால் எழுதிவைக்கவேண்டியது. அந்த மார்க்குகள் சரியானவையென்பதற்கு லைஸென்ஸுதாரன் ஜவாப்தாரியாவான். எண்பது அல்லது அதற்கதிகமான காலன்கள்கொள்ளும் பீப்பாய்களின் அடுத்த அரைகாலன்வரைக்கும் கணக்குப்போட்டு மார்க்குப்போடவேண்டியது. எண்பதுக்குக்குறைந்த காலன்கள்கொள்ளும் பீப்பாய்களில் அடுத்த கால் காலன்வரைக்கும் கணக்குப்போட்டு மார்க்குப்போடவேண்டியது.

2. பின்வரும் விஷயத்தில் டிஸ்டிலெரிகளிலிருந்தும் வேர் அவுஸ்களிலிருந்தும் டெப்போக்களில் கொண்டுவரப்பட்ட சாராயபீப்பாய்களையும், (b) விஷயத்தில் மற்ற டெப்போக்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சாராயபீப்பாய்களையும் அதிகாரம்பெற்ற ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் அளந்து சரிபார்ப்பதற்கு முன் திறக்கக்கூடாது :—

(a) விசாகபட்டணம் டிஸ்டில்லெரியிலிருந்து குனுபூர் ஏஜென்ஸியிலிருக்கும் டெப்போக்களுக்குபோகும் சாராயம் விஷயங்களில்.

(b) ப்ரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு சுதேச ராஜ்ஜியத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னியதேசத்து பிரதேசத்தின் மூலமாயாகிலும் போகும் சாராயங்கள் விஷயங்களில்.

(c) நெல்லிகுப்பம் டிஸ்டிலெரியிலிருந்து தென்னார்காடு ஜில்லாவின் தாழ்ந்த தீர்வை ட்ராக்ட்டுகளுக்குப்போகும் சாராயங்கள் விஷயங்களில்.

(d) பெஸ்வாடா வேர் அவுஸிலிருந்து கிருஷ்ணா ஜில்லாவில் முனகாலா விங்கிரி ஜமீன்களுக்குப் போகும் சாராய விஷயங்களில்.

(e) சாமல்கோட்டா டிஸ்டிலெரியிலிருந்து ராம்பா ஏஜென்ஸி டிராக்டுகளிலுள்ள டெப்போக்களுக்குப் போகும் சாராய விஷயங்களில்.

மற்றவிஷயங்களில் டெப்போ கீபர்கள் சாராயபீப்பாய்கள் வந்த உடன் சாராயத்தை சோதனை செய்யவேண்டியது. மேலும் வெகு சாக்கிரதையாய் அவர்களுடைய கணக்குகளில் சோதனையின் பலனை எழுதிவைக்கவேண்டியது. ஆனால் டெப்போகீபர் இஷ்டப்பட்டால் விற்பனைக்காக பீப்பாய் திறக்கப்படும்வரையில் அளந்து சரிபார்ப்பதை நிறுத்திவைக்கலாம். இந்த விஷயத்தில் டிஸ்டில்லரி அல்லது வேர்அவுஸ் ராதாரிச்சீட்டில் கண்ட அளவு சாராயத்திற்கு டிப்போ கீபர்கள் ஜவாப்தாரியாவார்கள். ஒழுக்குடனாவது சந்தேகப்படத்தக்க ஸ்திதியிலாவது வருகிற எல்லா பீப்பாய்களும் டெப்போவில் வந்தவுடன் அளந்து சரிபார்க்கப்படவேண்டியது.

3. சுதேசராஜ்ஜியத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னியதேசத்துப் பிரதேசத்தின் மூலமாயாகிலும் கொண்டுபோகப்படும் சாராயமானது அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களால் முத்திரைபோடப்படாமல் கொண்டுபோகக்கூடாது.

4. ஸால்ட், அப்காரி அண்ட் செபரேட் ரிவினியூ கமிஷனரால் நியமிக்கப்படும் மாதிரியான ஹைட்ராமீடர் ஒவ்வொரு டெப்போவிலுமிருக்கவேண்டியது. ஒருதெர்மாமிடரும் பங்ராடுங்கூட இருக்கவேண்டியது. பங்ராடும், வேண்டுமானால், ஹைட்ராமிடரும் தெர்மாமிடரும் டிபார்ட்மெண்டாரால் விலைக்கு சப்ளை செய்யப்படும்.

5. ஓல்சேல் டெப்போகீப்பர்கள் கான்ட்ராக்டு சப்ளையாரால் தன் கான்ட்ராக்ட் விஸ்தீரணத்தில் ஏற்படுத்தப்பட்ட டிஸ்டிலெரி அல்லது வேர் அவுஸுகளிலிருந்தும் அல்லது அதே விஸ்தீரணத்தில் இதர ஓல்சேல் டெப்போக்களிலிருந்துதான் நாட்டுசாராய லைசென்ஸுகளுக்குரிய நிபந்தனைகளில் இரண்டாவது நிபந்தனையில் காட்டிய டேபிளில் இரண்டாவது காலம் பிரகாரம் சாராயம் சப்ளை பெற்றுக்கொள்ளலாம்.

6. அந்த ஜில்லாவிலுள்ள லைஸென்ஸுபெற்றவர்களுக்கு மாத்திரம் சாராயம் விற்க வேண்டியது. ஆனால் குறைந்த சார்ஜ் உள்ள தாலூக்காவில் சாராயம் மொத்தவிற்பனை பண்ணும் டெப்போ லைசென்ஸ் பெற்றவர்கள் அதே ஜில்லாவில் உயர்ந்த சார்ஜ் உள்ள தாலூகாவிலிருக்கும் லைசென்ஸ்பெற்று விற்பவர்களுக்கு சாராயம் விற்கக்கூடாது.

7. ஓல்சேல் டெப்போகீப்பர்கள் தங்களுடைய டெப்போயிருக்கும் ரேஞ்சைவிட்டு இதர ரேஞ்சுகளிலிருக்கும் கடைகளுக்கு சாராயம் அனுப்பினால் அக்கடைகளிருக்கும் ரேஞ்சு சப் இன்ஸ்பெக்ட்டருக்கு எழுதித் தெரிவிக்கவேண்டும். டெப்போ இருக்கும் ரேஞ்சிலேயேயுள்ள கடைகளுக்கு சாராயம் அனுப்பும்பொழுதெல்லாம், டெப்போகீப்பர்கள், பெர்மிட்டுகள் எழுதும்பொழுதே, அட்வைஸ் லெட்டர்களையும் எழுதி அவைகளை சப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவாவது வேண்டும் அல்லது அவர் அடுத்ததடவை பரிசோதனைக்கு வரும்பொழுதாவது அவரிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

8. ஹோல்ஸேல் டெப்போக்களுக்கு வரும் ஒவ்வொரு பீப்பாய்க்கும், அப்பீப்பாய் அளவுக்கு நூற்றுக்கு 2 விழுககாடு டெப்போகீப்பர்களுக்கு சேதாரம் தள்ளிக்கொடுக்கப்படும். ஒவ்வொரு மாதத்தில் சாராய வரவுகளைப்பற்றி அடுத்த மாதம் 5 தேதிக்குள் பின் சொல்லப்பட்ட சங்கதிகளடங்கிய ஸ்டேட்டுமெண்டு ஒன்றை, டெப்போகீப்பர்கள் டெப்போ இருக்கும் ஸர்க்கிளின் இன்ஸ்பெக்டர் மூலமாய், கலெக்டருக்கு அனுப்பவேண்டும் :—

(i) டெப்போவுக்கு வந்த பீப்பாயின் நம்பர் ; (ii) ஒவ்வொரு பீப்பாயிலும் அனுப்பப்பட்டதாய் சொல்லப்பட்ட சாராயத்தின் அளவு ; (iii) பீப்பாயினின்று உள்ளபடி அளந்தெடுக்கப்பட்ட சாராயத்தின் அளவு ; (iv) ஒவ்வொரு பீப்பாயிலும் கண்டுபிடிக்கப்பட்ட சேதாரம்.

நூற்றுக்கு 2 வீதத்திற்கு மேற்பட்ட சேதாரமிருக்கும் ஒவ்வொரு பீப்பாய் விஷயத்திலும், கலெக்டர்கள், தங்கள் யுக்தானுஸாரம், சேதார அளவின்மேல் செலுத்தவேண்டிய ட்யூட்டிக்கு இரண்டு மடங்கான தொகைக்கு மேற்படாத அபராதம் விதிப்பார்கள். பீப்பாய்கள் பலவித தீர்வையுள்ள பிரதேசங்கள் வழியாய் வந்திருக்கும் பக்ஷத்தில் அந்த தீர்வைகளில் உயர்ந்த தீர்வை வீதம் அபராதம் விதிக்கப்படலாம். ஒரே சமயத்தில் விற்பனைக்காக ஒரு பீப்பாய்தான் திறந்துவைக்கவேண்டியது. டெப்போவிலிருந்து வெளியே போகும் சரக்குகள் எந்தெந்த பீப்பாய்களிலிருந்து அனுப்பப்பட்டதென்பதை டெப்போகீப்பர்கள் தங்கள் கணக்குப் புஸ்தகங்களில் விவரமாய் காண்பிக்கவேண்டியது.

9. ஷாப்புக்களுக்கு அனுப்பும் சாராய சரக்கு அடங்கிய பாத்திரங்களை டெப்போகீப்பர்கள் தங்களுடைய செலவில் ஸீல்செய்யவேண்டும். கலெக்ட்டரவர்கள் டெப்போவிலிருந்து கடைக்கு போகிற சாராயத்தில் கொஞ்சம் புட்டிகளில் அடைத்து ஸீல்வைத்து கடைக்கு அனுப்பவேண்டுமென்று உத்தரவு செய்யலாம். டெப்போ கீப்பர்கள் ஒரு பிரைவேட் ஸீலை உபயோகிக்கவேண்டும். டெப்போவிலிருந்து அனுப்பப்படும் சாராய சரக்குகளடங்கிய ஜாடிகளிலும் இன்னும் இதர பாத்திரங்களிலும் மேற்கூறிய முத்திரையின் அடையாளம்போடுவதோடுகூட சரக்குகளோடு அனுப்பப்படும் பர்மிட்டிலும் அடையாளம் போடவேண்டும். ஏந்த இன்ஸ்பெக்டர் இலாகாவில் டெப்போ இருக்கிறதோ அந்த இன்ஸ்பெக்டருக்கு வருஷத்தின் முதலில் டெப்போகீப்பர்கள் ஸீலின் அடையாளத்தை அனுப்பவேண்டும். அந்த வருஷத்திற்குள் அந்த ஸீலை மாற்றக்கூடாது.

10. டெப்போகீப்பர்களாவது அல்லது அவர்களுடைய நவுகர்களாவது சாராயக் கடைகளில் யாதொரு பாத்தியதையும் உடைத்தாயிருக்கக்கூடாது.

சுயாதீன சாராயக்கடை லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பேஷல் நிபந்தனைகள்.

1. சுதேசராஜ்ஜியத்தின் மூலமாயாகிலும் அல்லது அன்னியதேசத்து பிரதேசத்தின் மூலமாயாகிலும் கொண்டுவரப்படும் சாராயத்தை அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர்களால் பரிசோதனைசெய்வதற்குமுன் இறக்கக்கூடாது.

2. சாராயக்கடைக்காரர்கள் சாராய டெப்போக்களில் யாதொரு பாத்தியதையும் உடைத்தாயிருக்கக்கூடாது.

டாவரன் லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான நிபந்தனைகள்.

1. லைஸென்ஸுதாரன் ஸ்பிரிட்டுகளை அழுக்கெடுப்பதினாலாவது வர்ணம் கொடுப்பதினாலாவது அல்லது வாசனை கொடுப்பதினாலாவது அல்லது வேறெந்த வஸ்துவை சேர்ப்பதினாலாவது சுத்திபண்ணக்கூடாது.

2. இந்துதேசத்தில் வாசனை கொடுக்கப்பட்டதும், வர்ணம் கொடுக்கப்பட்டதும் அல்லது கலப்பு செய்யப்பட்டதுமான டாவரன்களில் கொண்டு வரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான ஸ்பிரிட்டுகளடங்கிய ஒவ்வொரு பாத்திரமும் "இந்தியாவில் வாசனை கொடுக்கப்பட்ட அல்லது வர்ணம்கொடுக்கப்பட்ட அல்லது கலப்புசெய்யப்பட்ட ஸ்பிரிட்டுகள்" என்கிறவார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது அல்லது சூட்டுக்கோலால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது. மொத்தமாய் இறக்குமதிசெய்யப்பட்டு இராஜதானியில் புட்டிகளில் அடைக்கப்பட்டு டாவரன்களில் கொண்டுவரப்பட்ட அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்ட எல்லா மதுவடங்கிய புட்டிகளின்பேரில் எவ்விதமான மதுவென்றும் உண்டுபண்ணப்பட்ட தேசமும் தன்னுடைய லைஸென்ஸில் கண்டிருக்கிறபடி புட்டியிலடைத்தவனுடைய பெயரும் புட்டியிலடக்கம் செய்த இடமும் தெளிவாய் காட்டுகிற ஒரு அச்சிட்ட லேபில் போடப்பட்டிருக்கவேண்டியது. இப்படிப்பட்ட லேபில் ஒட்டிய புட்டியிலிருக்கும் மதுவை விலைக்கு வாங்கிய லைஸென்ஸுதாரர்கள் அதன் குணத்தை எவ்விதத்திலும் மாற்றக்கூடாது. அந்த லேபிலிலிருக்கும் வார்த்தைகளை மாற்றவும்கூடாது. அப்படி செய்யும்பட்சத்தில் லைஸென்ஸ் ரத்துசெய்யப்படும்.

3. மலையாளத்தில் உண்டுபண்ணப்பட்ட தென்னஞ் சாராயத்தை கொள்ளவிரும்பும் லைஸென்ஸுதாரர்கள் அந்தசாராயசப்ளை கன்ட்ராக்டரிடத்தில் தாங்களே சொந்த ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டியது. கன்ட்ராக்டர் தன்னிடத்தில கையிருப்பு இல்லாமலிருந்தாலொழிய தென்னஞ் சாராயத்தை கொடுப்பதற்கு தடைசொல்ல பாத்தியமில்லை. அந்த மது "மலையாளத்தில் உண்டுபண்ணப்பட்ட ஸ்பிரிட்டுகள்" என்று லேபில் போடப்பட்ட பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கவேண்டியது.

4. வெளிதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அலலது இந்த தேசத்திலேயே செய்யப்பட்ட "அன்னியதேசத்து மதுக்களை" கீழேகண்டிருக்கிற காரமுள்ள டிக்ரிக்கு குறைந்து விற்கக்கூடாது :—

(1) தென்னஞ் சாராயமும், டினேச்சேர்டு ஸ்பிரிட்டுகளும்தவிர மற்ற எல்லா விதமான ஸ்பிரிட்டுகளுக்கு இட்டாலியாதேசத்து சாராயம் உள்பட 25° டிக்ரி குறைந்த காரம்.

(2) ஜின்னிற்கு 35° டிக்ரி குறைந்த காரம்.

பீர்ஷாப்பு இல்லாத இடத்தில் இருக்கும் டாவரன் லைஸென்ஸுகளுக்கும் பீர்ஷாப்பு லைஸென்ஸுகளுக்கும் சம்பந்தமான நிபந்தனை.

ராஜதானிக்குள்ளாக இந்தியன் பீர் விற்க லைஸென்ஸ்பெற்ற ஒவ்வொருவனுக்கும் மேற்படி பீரை உற்பத்திசெய்கிற ஒவ்வொருவனும் சரியான நாணய விலை கொடுத்ததின்பேரிலாவது அல்லது அந்தத் தொகைக்குச் சரியான ஜாமீன்கொடுத்ததின்பேரிலாவது நல்ல பீரை விற்பனை காலத்தில் செலாவணியாயிருக்கும் டியூடியையும் ஒவ்வொரு ஹாக்ஷெட்டுக்கு நாற்பது ரூபாய்க்கு அதிகப்படாமல் விலையையும் வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டும். மனுதாரர்களுக்கு தாங்கள் செய்துகொண்டமனுக்களின் வரிசைக் கிரமமாய் தாமதமின்றி நல்ல பீரை வாங்கிக்கொள்ள பாத்தியமுண்டு. பீர் குணத்தின் ஆக்ஷேபனைகளுக்கு போர்டார் தீர்மானஞ்செய்வார்கள். அதற்குமேல் அப்பீல் கிடையாது.

பீர்ஷாப்பு இல்லாத இடத்தில் இருக்கும் டாவரன் லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.

1. சுதந்தரமானது லைஸென்ஸு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திலேயே சாப்பிடும்படியான அன்னியதேச மதுவை விற்பனைபண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரே தடவையில் ஒரு ரெப்யூடெட் க்வார்ட்டுக்கு மேற்படாமல் வெளியிலே கொண்டுபோகிற மனிதனுக்கு விற்பனைபண்ணவும் சம்பந்தப்படுகிறது.

2. இந்துதேசத்தில் உற்பத்திபண்ணப்பட்டதும், கடைகளில் கொண்டுவரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான, பீருள்ள ஒவ்வொரு பாத்திரமும் "இந்தியாவில் உற்பத்திபண்ணப்பட்ட பீர்" என்கிற வார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது அல்லது சூட்டுக்கோவால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது.

பீர்ஷாப்புள்ள இடங்களிலிருக்கும் டாவர்ன் லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனை

சுதந்தரமானது லைஸென்ஸு கொடுக்கப்பட்டிருக்குமிடத்திலே சாப்பிடும்படியாய் பீரைத்தவிர மற்ற அன்னியதேச மதுவை விற்பனைபண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரே தடவையில் ஒரு ரெப்யூடெட் க்வாரட்டுக்கு மேற்படாமல் வெளியிலே கொண்டுபோகிற மனிதனுக்கு விற்பனைபண்ணவும் சம்பந்தப்படுகிறது.

பீர்ஷாப்பு லைஸென்ஸுகளுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனைகள்.

1. சுதந்தரமானது லைஸென்ஸு கொடுக்கப்பட்டிருக்குமிடத்திலேயே சாப்பிடும்படியான இந்தியாவில் உற்பத்திசெய்யப்பட்ட பீரை விற்பனைபண்ணவும் அவ்விடத்திலிருந்து ஒரேதடவையில் ஒரு ரெப்யூடெட் க்வார்ட்டுக்குமேற்படாமல் வெளியிலே கொண்டுபோகிற மனிதனுக்கு விற்பனைபண்ணவும் சம்பந்தப்படுகிறது.

2. இந்துதேசத்தில் உற்பத்திபண்ணப்பட்டதும், கடைகளில் கொண்டுவரப்பட்டதும் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறதுமான, பீருள்ள ஒவ்வொருபாத்திரமும் "இந்தியாவில் உற்பத்திபண்ணப்பட்ட பீர்" என்கிற வார்த்தைகளடங்கிய ஒரு தெளிவான லேபில் ஒட்டப்பட்டிருக்கவேண்டியது அல்லது சூட்டுக்கோலால் குறிக்கப்பட்டிருக்கவேண்டியது.

நீலகிரியிலிருக்கும் பீர் ஷாப்பு லைஸென்ஸ்களுக்கு சம்பந்தமான ஸ்பெஷல் நிபந்தனை.

லைஸென்ஸுதாரன் கலெக்டரால பிரசுரம்செய்யப்படும் புரூயரியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பீர் வாங்கிக்கொள்ளவேண்டியது.

கஞ்சா ஷாப்பு லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்.

1. லைஸென்ஸுதாரன், கவர்ன்மெண்டாரால் 1921-ம் ௵ ஜனவரி ௴ 11௳ போர்ட் ஸேண்ட் ஜார்ஜ் கெஜெட்டின் II-வது பிரிவில் 70 முதல் 80 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட 1921-ம் ௵ ஜனவரி ௴ 6௳ யுள்ள 1-ம் நெ. போர்ட்டு நோடிபிகேஷனில் அடங்கிய H.D. ரூல்களையும், அவைகளுக்கு சேர்க்கையாக அப்போதைக்கப்போது அவர்களால் பிரசுரஞ்செய்யப்படும் பொது அல்லது ஸ்பெஷல் ரூல்களையும் அனுசரிக்கவேண்டியது.

2. கொடுக்கப்பட்ட சுதந்தரமானது கஞ்சா, பங்கி இன்னும் சணல் செடியிலிருந்து செய்யப்படும் லாகிரி வஸ்துக்களை விற்பனை பண்ணுவதற்கு மாத்திரமேயாகும்.

3. கஞ்சா, பங்கி ஷாப்புக்காரர்கள் வேட்டபாளம், சந்தவாசல் ஸ்டோர் அவுஸ்களிலிருந்தாவது, அல்லது அதே ஜில்லாக்களிலுள்ள இதர ஷாப்புகளிலிருந்தாவது ஸப்ளைகள் வரவழைத்துக்கொள்ளவேண்டும். ஆனால், கலெக்டர் எந்த காலத்திலேயாவது, எந்த லைஸென்ஸுதாரனையாவது குறிப்பிட்ட ஏதாவது ஒரு இடத்திலிருந்துதான் ஸப்ளை வரவழைத்துக்கொள்ளவேண்டுமென்று உத்திரவு செய்யலாம்.

4. இஜாரா கடைசிமாதமாகிற மார்ச்சு மாதத்தில் லைஸென்ஸுதாரர்கள் அந்த இஜாரா முடிவுவரையில் தங்களுக்கு யதார்த்தமாய் எவ்வளவு கஞ்சா தேவையாயிருக்குமோ அதற்குமேல் இண்டெண்டு செய்யக்கூடாது. மார்ச்சு மாதத்தில் ஸ்டோர் அவுஸ் ஆபீஸருக்கு அல்லது இதர கஞ்சா கடைக்காரருக்கு லைஸென்ஸுதாரரால் அனுப்பப்படுகிற ஒவ்வொரு இண்டெண்டும் கடையானது இருக்கிற ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் துவாராவாக அனுப்பப்படவேண்டும். ஷை ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் ஷை இண்டெண்டில் குறிக்கப்பட்ட கஞ்சாவை பூராவாக ஒத்துக்கொள்ளாமல் தனக்கு யுக்தமாகத்தோன்றுகிறபடி ஒரு பகுதி மாத்திரம் ஸப்ளை செய்யும்படி உத்திரவு செய்யலாம்.

5. சந்தவாசல் ஸ்டோர் அவுஸிலிருக்கும் ஸ்டாக்கு சொந்தக்காரர்கள் கையில் ஸ்டாக்கு இருக்கும் வரையில் அவர்களுடைய லைஸென்ஸு நிபந்தனையின் பிரகாரம், விற்பனை செய்ய லைஸென்ஸு பெற்றவர்களுக்கு, எண்பது தோலா கொண்ட சேர் 1 க்கு ரூபாய் 1-8-0 வீதத்துக்கு மேற்படாமலும், அல்லது பொதுவாயாகிலும், ஏதாவது குறிப்பிட்ட கேஸிலாகிலும் நிர்ணயிக்கப்பட்ட ரேட்டுக்கு மேற்படாமலும், சட்டப்படி வழங்கிவரும் செலாவணியில் வேண்டிய கஞ்சாவின் விலையைப் பெற்றுக்கொண்டு ஸப்ளைசெய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். ரூல்களை அனுசரித்து ஷாப்பு கீப்பர்களால அனுப்பப்படும் இண்டெண்டுகளை பெற்றுக்கொண்ட கிரமப்பிரகாரமும் கூடியசீக்கிரத்திலும் பூர்த்திசெய்ய ஸ்டாக்கு சொந்தக்காரர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் எப்போதாவது ஊரைவிட்டு வெளியேபோனால் அப்போது தங்களுக்கு பதிலாய் காரியம்பார்க்க ஸ்டோர் ஹவுஸில் ஏஜண்டுகளை நியமிக்கவேண்டியது. அப்படிச்செய்யத் தவறினால் ஸ்டோர் ஹவுஸ் ஆபீஸரே அவர்கள் இல்லாத ஸமயத்தில்வரும் இண்டெண்டுகளை அவர்களுக்கு பதிலாய் பூர்த்திசெய்து கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை அனுப்பலாம்.

6. வேட்டப்பாளம் ஸ்டோர் அவுஸில், விற்பனைசெய்ய லைஸன்ஸ் பெற்றவர்களுக்கு சேர் 1-க்கு கஞ்சா ரூ. 1-6-0 வீதமும், பங்கி அணா 0-8-0 வீதமும் விற்கப்படும். ஸ்டோர் அவுஸிலிருந்து வாங்க விருப்பமுள்ள லைஸன்ஸ்தாரர்கள் லாகிரி வஸ்துக்களுடைய டூடியையும் விலையையும் அவர்களுடைய கடை இருக்கும் தாலூக்காவிலுள்ள கஜானாவில் செலுத்தவேண்டும். டூடியையும் விலையையும் செலுத்தினதிற்காக கொடுக்கப்பட்ட கஜானா ரசீதை ஸ்டோர் அவுஸ் ஆபீஸருக்கு அனுப்பவேண்டும். அந்த உத்தியோஸ்தர் ஸ்டோர் ஹவுஸிலுள்ள ஸ்டாக்குகளிலிருந்து லாகிரி வஸ்துக்களை சப்ளைசெய்வார்

7. கவர்ன்மெண்டு ஸ்டோர் அவுஸிலிருந்து வரவழைக்கப்பட்ட லாகிரி சரக்கடங்கிய பெட்டிகளை அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகஸ்தரால் ரூபகாரம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுமுன் திறக்கக்கூடாது. இந்த உத்திரவை மீறி நடப்பவர்களுக்கு 200 ரூபாய் வரைக்கும் அபராதம் விதிக்கப்படும்.

8. கலெக்ட்டரால் குறிக்கப்படுகிற அளவுக்கதிகமாக கஞ்சா, பங்கி இன்னும் சணல் செடியிலிருந்து செய்யப்படும் லாகிரி வஸ்துக்களை லைஸென்ஸுதாரன் வைத்துக்கொள்ளக்கூடாது. இஜாரா நடுவில் எந்த காலத்திலாவது கடைக்கு அனுப்பபபட்ட கஞ்சா மிதமிஞ்சிபோவதாய் காணப்பட்டால் கடைக்காரன் தகுந்த காரணம் காண்பிக்காதவரையில் மேற்கொண்டு வேண்டிய கஞ்சாவின் அளவை குறைக்க போர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

9. கடைக்காரர்கள் விற்பனைக்காக கடையில் வைத்திருக்கும் அச்சுப்போட்ட கஞ்சாவை தங்கள் கடைகளில் சாதாரணமாய் தினசரி விற்பனைக்குவேண்டிய அளவுக்குமேல் உடைக்கக்கூடாது. கஞ்சா, பங்கி இவைகளிலிருந்து இதர லாகிரிவஸ்துக்களை கடைகளில் உண்டுபண்ணலாம். இதர கடைக்காரர்களுக்கு விற்கலாம்.

10. லைஸென்ஸுதாரன் தன்னிடத்திலிருக்கும் கஞ்சா ஸ்டாக்கின் விதைகளையாவது அல்லது அதினுடைய வேறே எந்த பாகத்தையாவது அழிக்கக்கூடாது. அவன் கஞ்சாவிலிருந்து பிரித்து எடுத்திருக்கிற விதைகளையும் அழிக்கவேண்டுமென்று விரும்புகிற வேறு வஸ்துக்களையும் ஒரு பரிசோதக உத்தியோகஸ்தர் பார்வையிட்டு அழிப்பதற்கு ஜாக்கிரதையாய் காப்பாற்றிவைக்கவேண்டும்.

11. லைஸென்ஸுபெற்ற வேளாண்மைக்காரனுக்காவது அல்லது லைஸென்ஸுபெற்ற ஸ்டாக்கு சொந்தக்காரனுக்காவது சில்லறைச்கடைகளில் ஒருவிதமான பாத்தியமுமிருக்கக்கூடாது.

12. கஞ்சா லைஸென்ஸை திருட்டுத்தனமாகிய விற்பனைகளுக்கு உதவிபுரியும்படி உபயோகித்தாலாவது, கஞ்சாவை திருட்டுத்தனமாய் தூரதேச விற்பனைக்குக் கொண்டுபோகிறவனுக்கு லைஸென்ஸுதாரன் தெரிந்து விற்பனைசெய்தாலாவது, அல்லது இதைப்போன்ற குற்றம் யர்தாயினும் லைஸென்ஸுதாரன் செய்திருக்கிறான் என்று சந்தேகப்படும்படி கலெக்டரவர்களுக்கு காரணம் ஏற்பட்டாலாவது, அவர் தன்னுடைய காரணங்களை தாக்கல் செய்துகொண்டு உடனே லைஸென்ஸை ரத்துசெய்து அந்த சுதந்திரத்தை மறுயேலம் போடலாம்; அல்லது வேறே எந்த ஏற்பாடாவது செய்யலாம். அதினாலுண்டாகிற சகல நஷ்டத்துக்கும் லைஸென்ஸுதாரன் பாத்தியப்படவேண்டும். இந்த நிபந்தனையின்பிரகாரம் லைஸென்ஸை ரத்துசெய்துவிட்டால், குத்தகைகாலமுழுமைக்கும் செலுத்தவேண்டிய குத்தகை தொகையானது உடனே பாக்கியாய்விடும்.

அபினி லைஸென்ஸுகளுக்குரிய நிபந்தனைகள்.

1. லைஸென்ஸுதாரன் அபினி ஆக்ட்டை அனுசரித்து 1918-ம்௵ ஜூலை௴ 16௳ யுள்ள போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜெட்டின் I-வது பிரிவின் 710 முதல் 714 வரையிலுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட 1918-ம்௵ ஜூலை௴ 9௳ யுள்ள கவர்ன்மெண்டு கோடிபிகேஷன் நெ. 3 ல் அடங்கிய ரூல்களையும் அப்போதைக்கப்போது அவர்களால் பிரசுரஞ் செய்யப்படும் பொது அல்லது ஸ்பெஷல் ரூல்களையும் அனுசரிக்கவேண்டியது.

2. கொடுக்கும் சுதந்திரம், கிரமமாய் அனுமதிபெற்ற கடைகளில் (a) அபினி சில்லறை விற்பனைக்கும் (b) மார்பியா அல்லது புகைகுடிப்பது தவிர இதரவேலைகளுக்கு உபயோகப்படும் லாகிரிவஸ்துக்களை அபினியிலிருந்தாவது போஸ்தக்காயிலிருந்தாவது உற்பத்திபண்ணி சில்லறை வியாபாரம் பண்ணுகிறதற்குந்தான்.

3. தாசில்தார் கச்சேரியில் விற்கும் அபினியின் முழு சேர் அரை சேர் கட்டிகளின் விலைகள் முறையே ரூ. 63-0-0, ரூ. 31-8-0.

4. லைஸென்ஸுதாரன் தனக்கு வேண்டிய அபினியை * *
தாசில்தார் கச்சேரியில் அது விஷயமாக ஏற்படுத்தியிருக்கிற ரூல்களை அனுசரித்து அரைசேருக்கு அல்லது அரைச்சேர் அரைச்சேராகவே சேர்க்கும்படியான அளவுக்குக் குறையாமல் வாங்கிக்கொள்ளலாம். (குறிப்பு.—ஒரு தாசில்தார் கச்சேரியிலிருந்து கடைக்காரர்கள் $\frac{1}{2}$ சேர், 1 சேர், $1\frac{1}{2}$ சேர் என்று அபினி வாங்கலாமேதவிர $\frac{3}{4}$ சேர், $1\frac{1}{8}$ சேர், $1\frac{3}{4}$ சேரென்று வாங்கமுடியாது.) இதுவுமல்லாமல் கலெக்டருடைய பிரத்தியேகமான உத்திரவின்பேரில் ஒரே ஜில்லாவிலிருக்கிற இதர கடைகளிலிருந்தும் அபினி வாங்கிக்கொள்ளலாம். மேற்சொல்லியபடி வாஙகுகிற அபினியைத்தவிர வேறுவிதமான அபினியை கடைக்காரர்கள் விற்கவாவது பெற்றுக்கொள்ளவாவது ஸ்வாதீனத்தில்வைத்துக்கொள்ளவாவது கூடாது. இஜாரா கடைசிமாதமாகிற மார்ச்சுமாதத்தில் லைஸென்ஸுதாரர்கள் அந்த இஜாரா முடிவுவரையில் தங்களுக்கு யதார்த்தமாய் எவ்வளவு அபினி தேவையாயிருக்குமோ அதற்குமேல் வரவழைக்கக்கூடாது. மார்ச்சுமாதத்தில் அனுப்பப்படுகிற ஒவ்

* இந்த இடத்தில் அந்த கடை இருக்கும் தாலூகாவின் பெயரையாவது அல்லது கலெக்டரால் உத்தரவு செய்யப்பட்ட தாலூகாவின் பெயரையாவது எழுதவேண்டியது.

வொரு இண்டெண்டையும், தாலூக்கா டிரெஷரி உத்தியோகஸ்தர் ஜாக்கிரதையாக பரிசோதித்து, ஷை இண்டெண்டில் குறிக்கப்பட்ட அபினியை பூராவாக ஒத்துக்கொள்ளாமல் தனக்கு யுக்தமாக எவ்வளவு அபினி தேவையாயிருக்குமென்று தோன்றுகிறதோ அவ்வளவுமாத்திரம் கொடுக்க உத்திரவுசெய்யலாம்.

5. எஜென்ஸி டிவிஷனில் தவிர இதர இடங்களில் ஒரு லைஸென்ஸுபெற்ற கடைக்காரன் ஒரேகாலத்தில் ஒரு மனுஷனுக்கு 1 தோலாவுக்கு மேற்பட்ட அபினி அல்லது இதர லாகிரிவஸ்துக்களை விற்கக்கூடாது. மேற்சொன்ன எஜென்ஸி டிவிஷனில் மாத்திரம் 3 தோலாவுக்கு அதிகப்படாமல் விற்கலாம்.

6. கலெக்ட்டரால் குறிக்கப்படுகிற அளவுக்குமேல், அபினி, மார்பியா அல்லது புகை குடிப்பதற்கு உபயோகமாயுள்ள வஸ்துக்களைத் தவிர இதர லாகிரிவஸ்துக்களை லைஸென்ஸுதாரன் ஏககாலத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஒரு லைஸென்ஸின்படி விற்கக்கூடியது இவ்வளவுக்கு மேற்படக்கூடாதென்று ஏலகாலத்தில் கலெக்ட்டர் பிரசுரம் செய்து நிர்ணயித்துவிடலாம். இஜாரா நடுவில் எந்த காலத்திலாவது கடைக்கு அனுப்பப்பட்ட அபினி மிதமிஞ்சிபோவதாய் காணப்பட்டால் கடைக்காரன் தகுந்த காரணம் காண்பிக்காத வரையில் மேற்கொண்டு வேண்டிய அபினியின் அளவை குறைக்க கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு.

7. இந்த லைசென்ஸை திருட்டுத்தனமாகிய விற்பனைகளுக்கு உதவிபுரியும்படி உபயோகித்தாலாவது, அபினியை திருட்டுத்தனமாய் தூரதேச விற்பனைக்கு கொண்டுபோகிறவனுக்கு லைசென்சுதாரன் தெரிந்து விற்பனை செய்தாலாவது, மேற்கூறிய இரண்டு குற்றங்களில் ஏதாவது ஒன்றில் லைசென்சுதாரன் குற்றவாளியென்று கலெக்ட்டர் அவர்கள் சந்தேகிக்க தகுந்த காரணங்கள் தோன்றினாலாவது, கலெக்ட்டர் அவர்கள் மேற்கூறிய காரணங்களை தாக்கல்செய்து, லைசென்ஸை ரத்துபண்ணியாவது சுதந்தரத்தை மறுயேலம் போட்டாவது அல்லது வேறே ஏதாவது ஏற்பாடாவது செய்துவிடலாம். அதினாலுண்டாகிற சகல நஷ்டத்திற்கும் லைசென்சுதாரன் உட்படவேண்டியது. இந்த நிபந்தனையின் கீழ் குத்தகைச்சீட்டு ரத்துசெய்துவிடப்பட்டால் குத்தகைகால முழுமைக்கும் செலுத்த வேண்டிய குத்தகை தொகையானது உடனே பாக்கியாய்விடும்.

8. லைஸென்ஸு கொடுக்கப்பட்ட இடங்களில் அபினி அல்லது அதிலிருந்து செய்யப்பட்ட எவ்விதரூபமுள்ள வஸ்துக்களை புகை குடிக்கவாவது அல்லது புஜிக்கவாவது கூடாது. மார்பியா அல்லது புகைகுடிப்பதற்கு உபயோகமாயுள்ள வஸ்துக்களை விற்பனைசெய்யவுங்கூடாது.

9. வைத்தியவிஷயத்திற்குமாத்திரம் அபினி விற்கவும் அபினியிலிருந்து வஸ்துக்களை செய்யவும் விற்கவும் வைத்தியர்களுக்கு பிரத்தியேகமான லைஸென்ஸுகள் கொடுப்பது கலெக்ட்டருடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தது.

ரிவினியு போர்ட் (ஸெபரேட் ரிவினியு),
சென்னை, 1922-ம் வருஷம் ஜனவரிமீ 19உ.

டி. என். ஸ்ட்ராதி,
ஸெக்ரெட்டரி.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

II-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART II OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 7, 1922.

ந. 6.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் பிப்ரவரி மீ 7உ. [விலை, 6 பை.

ABKARI NOTICE.

1922–23-ம் வருஷத்திற்காக மதராஸ் டவுனிலுள்ள ஆப்காரி அபினி சுதந்தரங்களை விற்பனைபண்ணுவதைப்பற்றிய நோட்டீஸ்.

1922-ம் வருஷம் எப்ரல் மீ 1உ முதல் 1923-ம் வருஷம் மார்ச்சு மீ 31உ யுடன் முடிவாகிற இஜாராவுக்கு மதராஸ் டவுனிலுள்ள அடியில் கண்டிருக்கும் பட்டைசாராயக்கடைகளும் டாவர்ன்களும், கஞ்சா, அபினிக்கடைகளும் மதராஸ் கலெக்டரவர்களால், அவர்களுடைய ஆபீஸில் 1922-ம் வருஷம் பிப்ரவரி மீ 16உ வியாழக்கிழமை பகல் 12 மணிமுதல் லேலம் போடப்படும் :—

ஷெட்யூல் I.—பட்டைசாராயக்கடைகள்.

கடை நெம்பர். — கடைகளின் எல்லைகள்.

1. புது வண்ணாரப்பேட்டை, திருவத்தியூர் ஐரோடு, அருணாசல ஈஸ்வரன்பேட்டை அம்மன் கோவிலுக்கும் வெங்கிட கிருஷ்ணன் தெருவுக்கும் மத்தியில் 200 கெஜம்.
2. இராயபுரம் மன்னார்சாமி கோவில் தெரு, போலீஸ் ஸ்டேஷனுக்கும் 60-ம் நம்பர் வீட்டிற்கும் மத்தியில் 200 கெஜம்.
3. பழைய வண்ணாரப்பேட்டை திருவத்தியூர் ஐரோட்டில் கல்லறை ரோட்டுக்கும் வெங்கடகிருஷ்ணன் தெருவுக்கும் மத்தியில்.
4. பெரம்பூர், பெரம்பூர் ஐரோடு, ரெயில்வே ஸ்டேஷனுக்கும் பறச்சேரிக்கும் மத்தியில்.
5. ஜியார்ஜ்டவுன் சாலைவிநாயகர் தெரு, பிருட்வேக்கும் ராமசாமி தெருவுக்கும் மத்தியில்.
6. ஜியார்ஜ்டவுன் தாதா முத்தியப்பன் தெரு, கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் தங்கசாலை தெருவுக்கும் மத்தியில்.
7. ஜியார்ஜ்டவுன் ஏழுகிணற்று தெரு, அம்மன்கோவில் தெருவுக்கும் செண்ட் ஜேவியர் தெருவுக்கும் மத்தியில் 217 கெஜம்.
8. ஜியார்ஜ்டவுன் ஆனைகெவுனி முருகப்பன் தெரு, ஒத்தவாடை ரோட்டுக்கும் கந்தப்பமுதலி தெருவுக்கும் மத்தியில் 83 கெஜம்.
9. சிந்தாதரிப்பேட்டை கூவம் ஆத்துரோட்டில் சாமிநாயக்கன் தெருவுக்கும் அருணாசல நாயக்கன் தெருவுக்கும் மத்தியிலாவது அல்லது அருணாசல நாயக்கன் தெருவில் செண்ட் ஆண்ட்ரூஸ் வாராவதிக்கும் கிழவ செட்டி தெருவுக்கும் மத்தியில் எங்கேயாகிலும்.
10. சூளை அவதானம் பாப்பையர் தெருவிலிருக்கும் முனிசிபல் வண்டிதொட்டிக்கும் தர்மராஜா கோயிலுக்கு எதிரில் சூளைக்கடை ரோட்டிலிருந்து பிரியும் புதுக்கடைத் தெருவுக்கும் மத்தியில்.

(குறிப்பு.—சூளை பஜார் ரோட்டில் டிராம் வண்டி ஓடுகிற புறத்தில் கடையை வைக்கக்கூடாது இந்தக் கடையை சாதாரண நாட்களில் பகல் 11-30 முதல் மாலை 1-30 மணி வரையிலும், மில்லில் சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் மாலையிலும் மூடிவிடவேண்டியது. ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 11-30 மணிக்கு மேல் மாலை 4 மணி வரையில் மட்டும் திறந்துவைக்கவேண்டியது.)

11. புரசவாக்கம் வெங்கடேச சமாதி தெரு.
12. பெரியமெட்டு இருசப்பன் தெருவில் எங்கேயாவது 110 கெஜம் நீகளம்.

ஷெட்யூல் I.—பட்டைசாராயக்கடைகள்—தொடர்ச்சி.

கடை நெம்பர். — கடைகளின் எல்லைகள்.

13. புதுப்பேட்டை—வடக்கு, ஆரிஸ் ரோடு ஆரிஸ் வாராவதியிலிருந்து மதராஸ் ஸிட்டி போலீஸ் எட்குவார்டர்ஸ் குதிரை லைன்ஸ் வரையில்; கிழக்கு, கூவம் ரோடு; தெற்கு, கூவம் ரோடு; மேற்கு, வேலாயுத செட்டி தெரு, ஆரிஸ் ரோட்டிலிருந்து கூவம் ரோட்டு வரையில். கடை மேல்கண்ட எல்லைக்குள் ஆக்ஷேபனையில்லாத இடத்தில் வைக்கப்படவேண்டுமேயொழிய கமிசேரியட் லைன்சுக்கு அருகிலாவது, ஆரிஸ் ரோட்டுக்காவது, கூவம் ரோட்டுக்காவது அல்லது வேலாயுத செட்டி தெருவின் வட முனைக்கு 50 கஜத்துக்குள்ளாவது வைக்கக்கூடாது.
14. நுங்கம்பாக்கம் அகஸ்தீஸ்வரன் கோவில் தெரு அல்லது வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம் ஐரோட்டுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் மத்தியில்.
15. திருவல்லிக்கேணி திருவட்டீசுவரன்பேட்டை ரோடு, ஆறுமுக செட்டி தெருவுக்கும் அருணாசல ஆசாரி தெருவுக்கும் மத்தியில் 100 கெஜம்.
16. திருவல்லிக்கேணி, புலிபோன் பஜார் வாணியன் தெருவில் எங்கேயாவது.
17. திருவல்லிக்கேணி—இந்தக் கடையை ஷை வருஷத்திற்கு மூடிவிடுவது யோசனையிலிருக்கிறது.
18. ராயப்பேட்டை ஐரோடு, பழைய போலீஸ் ஸ்டேஷனுக்கும் பீடர்ஸ் ரோட்டுக்கும் மத்தியில் 210 கெஜம்.
19. தேவனாம்பேட்டை மவுண்ட்ரோடு, ஆர்டிகல்ச்சரல் தோட்டத்திற்கு அருகாமையிலிருக்கும் வாராவதிக்கு தெற்கே 200 கெஜத்திற்குள்.
20. மைலாப்பூர், கச்சேரி ரோடு, பஜார் ரோட்டு, அருண்டெல் தெரு, இவைகளில் ஆக்ஷேபனையில்லாத எங்கேயாவது ஒரு இடத்தில்.

ஷெட்யூல் II.—டாவர்ன்கடைகள்.

கடை நெம்பர். — கடைகளின் எல்லைகள்.

1. ராயபுரம் பிரண்டன் பஞ்சு பிரஸ் ரோட்.
2. ஜியார்ஜ்டவுன் ஏழுகிணற்று தெரு, ஆணைக்காரகோணன் தெருவுக்கும் அம்மன்கோவில் தெருவுக்கும் மத்தியில்.
3. ஜியார்ஜ்டவுன் ஆதியப்ப நாயக்கன் தெரு, தங்கசாலை தெருவுக்கும் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் மத்தியில்.
4. ஜியார்ஜ்டவுன் நயினியப்ப நாயக்கன் தெரு அல்லது மிமோரியல் ஹால் வடக்கு தெரு, மிமோரியல் ஹாலுக்கும் ராசப்பசெட்டி தெருவுக்கும் மத்தியில்.
5. புரசவாக்கம் மூக்காத்தாள் தெருவில், கல்லறைக்கும் புரசவாக்கம் ஐரோட்டுக்கும் மத்தியில்.
6. வேப்பேரி ஐரோடு, பார்க்கு ரோட்டுக்கும் பெரியண்ண மேஸ்திரி தெருவுக்கும் மத்தியில்.
7. எழும்பூர் ஐரோடு, எழும்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்கும் தபாலாபீசுக்கும் மத்தியில்.
8. மவுண்ட் ரோடு, ரவுண்ட் டாணாவுக்கும் மவுண்ட் ரோட்டுக்கும் நீலன் துரை பிரதிமைக்கும் மத்தியில்.
9. திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடு, வீரராகவ முதலி தெருவுக்கும் திருவல்லிக்கேணி ஐரோட்டுக்கும் மத்தியில் 200 கெஜம் தூரம்.
10. மைலாப்பூர் கச்சேரி ரோடு, அரண்டல் தெருவுக்கும் கடைத்தெருவுக்கும், கடைத்தெரு முழுவதிற்கும் மத்தியில்.

ஷெட்யூல் III.—கஞ்சாக்கடைகள்.

கடை நெம்பர். — கடைகளின் எல்லைகள்.

1. ஜியார்ஜ்டவுன் மண்ணடி தெரு, மூர் தெருவுக்கும் அய்யப்ப செட்டி தெருவுக்கும் மத்தியில்.
2. ஜியார்ஜ்டவுன் சைனாபஜார்ரோடு, தங்கசாலை தெருவுக்கும் இருசப்பமேஸ்திரி தெருவுக்கும் மத்தியில்.
3. வண்ணாரப்பேட்டை திருவத்தியூர் அயிரோட், கல்லறைரோட்டுக்கும் ராமானுஜ அய்யர் தெருவுக்கும் மத்தியில்.
4. சூளைக்கடைரோட்டில் டிமலோஸ்ரோட்டில் எங்கேயாவது.
5. திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ்ரோடு, பக்கிர்சாயப்பு தெருவுக்கும் வீரராகவ முதலி தெருவுக்கும் மத்தியில்.

ஷெட்யூல் IV.—அபினிக்கடைகள்.

கடை நெம்பர். — கடைகளின் எல்லைகள்.

1. பழைய வண்ணாரப்பேட்டை, திருவத்தியூர் ஐரோடு, கல்லறை ரோட்டுக்கும் வரதா கிருஷ்ணம தெருவுக்கும் மத்தியில்.
2. ஜியார்ஜ்டவுன் வரதா முத்தியப்பன் தெரு, ஆதியப்ப நாயக்கன் தெருவுக்கும் அண்ணா பிள்ளை தெருவுக்கும் மத்தியில் அல்லது ஆதியப்ப நாயக்கன் தெருவில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் வரதா முத்தியப்பன் தெருவுக்கும் மத்தியில்.
3. பாரக்ஸ் கேட் தெருவில் எங்கேயாவது அல்லது டிமலோஸ் ரோட்டில் பாரக்ஸ் கேட் தெருவுக்கும் சூளை ஸ்லாட்டர் அவுசுக்குப்போகும் சந்திற்கும் மத்தியில்.
4. திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி ஐரோடு (கிழக்கு)க்கும் அமீர்மஹால் (மேற்கு)க்கும் மத்தியில்.

குறிப்பு.—(1) ஏலம் நடந்துகொண்டிருக்கையில் எவருடைய ஏலத்தொகை விலை ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அவர் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தர் உத்தரவுபண்ணும்பட்சத்தில் உடனேயும், இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்தில் முதலில்கட்டும் டேவணி இரண்டுமாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய ஒவ்வொரு கடைக்கும் ஏலம் கேட்கிறதற்கு கட்டிய டிபாசிட்டுத் தொகை ரூபாய் 50 தவிர அரைமாதத்திய குத்தகைத்தொகை டேவணியாக செலுத்தவேண்டியது. அப்படி கட்டாவிட்டால் அவர் கட்டிய டேவணித்தொகை அவரால் இழந்துவிடப்பட்டு, அந்த கடை மேற்சொல்லிய நிபந்தனைகளை அனுசரித்து உடனே ஏலம் போடப்படும், அல்லது கலெக்டரால் வேறே எவ்விதமாயாவது வினியோகஞ்செய்யப்படும். அப்படி டேவணி கட்டத்தவறினவன் அதே கடைக்காவது அல்லது வேறு எந்த கடைக்காவது ஏலத்தில் மறுபடியும் விலை கேட்பதற்கு யோக்கியதையில்லாதவராய்விடுவார்.

(2) மேற்கண்ட ஷெட்யூல்களில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள், யாதொரு ஆக்ஷேபணையில்லாத இடத்தில்தான், ஏலத்தில் கடை எடுத்தவர்கள் தங்கள் கடைகளை வைத்துக்கொள்ள உத்திரவு கொடுக்கப்படும். தவிர, கடைகள் ஒன்றுக்கொன்று 100 கஜம் தூரத்திற்குள்ளாக இருக்கக்கூடாது.

(3) கடைகளெடுத்தவர்கள் அவரவர் கடைகளை வைத்துக்கொள்வதற்கு தங்களால் நியமிக்கப்பட்ட ஸ்தலத்தின் நான்கெல்லை விஸ்டுகளை ஏலமான 10 தினத்திற்குள்ளாக மதராஸ் டவுன் ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. அப்படி நியமிக்கப்பட்ட ஸ்தலங்களுக்கு எக்ஸைஸ் லைஸென்ஸிங் போர்டார் அவர்களின் நிராக்ஷேபனை தெரிந்தவுடன், போர்டார் அவர்களின் ஏல நோட்டீஸின் நிபந்தனைகளின் முறைமைப்படி உடன்படிக்கைகளை தயார்செய்யவேண்டியது.

(4) ஏலமெடுத்தவர்கள் தகுமான ஸ்திதியற்றவரென்று கலெக்டர் அவர்களுக்குப் படும் பக்ஷத்தில் உடனே நோட்டீஸ் மூலமாய் அறிவிக்கப்படும். அப்படி நோட்டீஸ் பெற்றவர்கள், தம் தம் கடைகளின் மறு இரண்டுமாத கிஸ்தியை அதிக டேவணியாக உடனே கட்டவேண்டியது; அல்லது கலெக்டர் அவர்களுக்கு திருப்தியான ஜாமீனைக்காண்பித்து, வேண்டிய ஜாமீன் பத்திரங்களை முடித்து ரிஜிஸ்தர் செய்யவேண்டியது. இப்படி செய்வதில் தாமதிப்பவர்களுக்கு லைஸென்ஸு கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்படும்.

(5) விசேஷ காரணங்களிருந்தாலொழிய டெம்பரெரி லைஸென்ஸு கொடுக்கப்படமாட்டாது; அதிலும், வருஷத்திய லைஸென்ஸு கொடுபடாமலிருப்பதற்கு காரணம், லைஸென்ஸுதார் மேற்கண்ட நிபந்தனைகளின்படி செய்யத்தவறியதனாலென்று ஏற்படும்பக்ஷத்தில், அவர்களுக்கு டெம்பரெரி லைஸென்ஸு ஒருக்காலும் கொடுக்கப்படமாட்டாது.

(6) கடை கிஸ்தி செலுத்தவேண்டிய விஷயத்தில் அடியிற்கண்டிருக்கும் விதிகள் அனுஷ்டிக்கப்படும்:—

(i) கடை கிஸ்தி ஒவ்வொரு மாதமும் 10௳ அல்லது அதற்கு முந்திசெலுத்தப்படவேண்டியது.

(ii) அப்படி செலுத்தத்தவறுகிற எல்லா தொகைகளுக்கும் 10௳ முதல் வருஷம் ஒன்றுக்கு 100 க்கு 6 வீதம் வட்டியும், கடை ஒன்றுக்கு ரூபாய் 1 அபராதமும் விதிக்கப்படும்.

(iii) மாதாந்திர கிஸ்தி தொகையை அந்தந்த௴ 25௳க்குள் செலுத்தத்தவறினால் கடை மறு ஏலத்திற்குக் கொண்டுவரப்படும்; அதனாலுண்டாகும் நஷ்டத்தை பழைய லைஸென்ஸுதாரனிடமிருந்து வசூல் செய்யப்படும்.

(7) மதராஸ் டவுனில், பட்டை சாராயக் கடைகளையும், பத்தாய் சாராய டாவர்ன் கடைகளையும் காலை 9½ (9-30 a.m.) மணிக்குள்ளாக திறக்கக்கூடாது.

மதராஸ் கலெக்டர் ஆபீஸ்,
1922-ம் ௵ ஜனவரி௴ 21௳.

ஏ. ஆர். காக்ஸ்,
கலெக்டர்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.